சிவமயம்

குமரகுருபரன்

மலர் 16] 1965ஆ ஐப்பசி 1-ம் உ (17-10-65) [இதழ் 10

தனிப் பிரதி 13 நயா பைசா வருடச் சந்தா ரூ. 1½

ஆசிரியர் குழு

1. வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள்
ஸ்ரீ காசிமடம் இளவரசு, திருப்பனந்தாள்
2. திரு. கே. சிவராமன் அவர்கள் M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்,
காசிச் சர்வகலாசாலை, காசி.
3. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A. B. O. L.
பிரின்ஸிபால், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்,
4. ராவ்சாஹிப், வித்துவான். திரு. கு. அருணாசலக் கவுண்டர்
அவர்கள், தலைமைத் தமிழ் விரிவுரையாளர், ம. தி. தா. இந்துக்
கல்லூரி, திருநெல்வேலி.
5. திரு. பி. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள் B. A.,
ஓய்வு பெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி, புளியங்குடி.
6. திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை அவர்கள் B. A., L. T.,
அசிஸ்ட்டண்டு கமிஷனர்.
H. R. & C. E. (Adm) Dept. Ramanad at Madura-2
7. திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A.
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப் பல்கலைக்கழகம், காசி.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L.,
நிர்வாக ஆசிரியர்.

உள்ளுறை

பக்கம்

1. தில்லைச் சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை 17 ... 489
2. திருமந்திரம், ஐந்தாம் தந்திரம்.
(Tirumantiram Tantra the fifth) ... 495
3. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்–உரைநடை 498
4. Hymns of the Tamil Saivite Saints ... 501
5. திரு இராமேச்சுரம் 502
6. திருவாசக அநுபூதி உரை ... 510
7. வாழ்க்கைப் போராட்டம் ... 511
8. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் அற்புதத் திருப்
பதிகங்கள் 516
9. கச்சிப் பெரும்பதி 519
10. தாயுமானவர் — பராபரக்கண்ணிகள் ... 526
11. தேவிகாலோத்தரம் – சர்வாஞானோத்தரம் ... 527
12. சிதம்பர இராமலிங்கர் புலம்பர் கண்ணி ... 532
13. Aid to Sanskrit Studies at Sri Parvatha
Vardhani Girls' High School,
Rameswaram, Capital Rs. 18000 ... 533

உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை

குமரகுருபரன்

மலர் 16 | விசுவாவசு-ஹு ஐப்பசித் திங்கள் 1-ம்வ [17-10-65] | இதழ் 10

தில்லைச் சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை

(கட்டுரை 17)

தொண்டைமண்டலாதீனம் மகாசந்நிதானம்
சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள்
ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலயம்,
காஞ்சிபுரம்.

நேரிசை வெண்பா

"தலைவளைத்து நாணியெந்தை தண்ணளிக்கே யொல்கும்
குலைவளைத்த கற்பகப்பூங் கொம்பர் — கலைமறைகள்
நான்குமரி யார்க்கிந்த ஞாலமெலாம் ஈன்றளித்தும்
தான்குமரி யாகியிருந் தாள்." (15)

இறைவன் தண்ணளிக்கே தலைவளைத்து நாணி ஒல்கும் (குலைவளைத்த கற்பகப்)பூங் கொம்பர் என்னும் ஒன்றே முக்காலடி

யின் பொருள் சிவகாமவல்லி என்பதாம். கொம்பர் என்பதும் வல்லி என்பதும் பொருளால் ஒன்றே. வல்லி என்பது கொடியை உணர்த்தும். கொம்பர் என்பது முதலது திணைக்குப் பெயரா யினும் ஆகுபெயராய் முதற்பொருளைக் குறிக்கும், ஈண்டுப் பூங் கொம்பு கற்பக மரத்தினது என்று உணர்க. கொம்பு என்பது கொம்பர் என்று செய்யுளில் வழங்கப்படுதலை, வண்டு - வண்டர் என்பது முதலியவற்றால் அறிந்திருக்கலாம். கற்பகக் கொம்பு. கற்பகப் பூங்கொம்பு, என்க. 'கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவாழ்வோ' எனச் சுந்தரமூர்த்தி நாயனார் அதிசயித்தார் என்று பரவை நாய்ச்சியார் காட்சியில் அறிவித்தது காண்க. 'கொம்பர் இல்லாக் கொடிபோல் அலமந்தனன் கோமளமே' என்பதில் உள்ள கொம்பர் அன்று இது, கொம்பில் அரும்பாய்க் குவிமலராய்க் காயாகி வம்பு பழுத்து உடலம் மாண்டு இங்ஙன் போகாமே' என்பதில் உள்ள கொம்பு இக் (கற்பகப் பூங்) கொம்பர். 'தாவிப் படரக் கொழுகொம்பு இலாத தனிக் கொடி' என்பதிற் குறித்த கொள் கொம்பு (–கொழு கொம்பு) கம்புமாம். அதையே 'கொம்பர் இல்லாக் கொடி' என்றது திருவாசகம். பூக்களைக் கொள்ளுங் காரணத்தாற் 'கொள்பு' என்று பெயரா யிற்று, அக் 'கொள்பு' என்பதே வழக்குப் பயிற்சியால், 'கொம்பு' என்று மரீஇயிற்று. கண்பு (— கணுக்களையுடையது) என்பது கம்பு எனமருவிற்று. வீண்பு-விம்பு, பாண்பு-பாம்பு, காண்பு-காம்பு என்பவற்றிலே ணகரவொற்று மகர வொற்றாயினமை காண்க. யாடு + கால் = யாட்டுக்கால். இதில், டகரவொற்று மிக்கது. ஏன் மிக்கது? யாடு என்னுஞ் சொல்லின் ஈற்றிலுள்ள குற்றுகரம் ஏறிய மெய் அதுவே ஆதலின் மிக்கது. டகரத்திற் குட்டகரமே இனவொற்று, பிற்காலத்தார் ணகரவொற்றே டகர வொற்றிற்கு இனவொற்றென்பார். இது தொல்காப்பியர் கூறி யதற்கு வேறுபட்டது. 'வல்லெழுத் தென்ப கசட தபற' என்ற தனையும் 'வல்லினங் கசடதபற என ஆறே' என்றதனையும் ஊன்றியுணர்வார்க்கு நன்னூற்போக்கு, பின்னூற் போக்கு என்பது புலனாகும். வல்லெழுத் தெல்லாம் ஒன்றற் கொன்று இனம் ஆமோ? மெல்லெழுத்தும் இடையெழுத்தும் அங்கனம் இனம் ஆதல் உண்டோ? ககர மெய்க்கு ஙகர மெய் இனமாமோ? தொல்காப்பியர்,

" ஈரெழுத்து மொழியும் உயிர்த்தொடர் மொழியும்
வேற்றுமை யாயின் ஒற்றிடையினம் மிகத்
தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி"

" ஒற்றிடை யினம் மிகா மொழியுமா ருளவே
அத்திறத் தில்லை வல்லெழுத்து மிகவே."

என்னும் நூற்பாக்களில் ஆசிரியர் தொல்காப்பியர் இனவொற்று என்றது அவ்வவ்வொற்றிற்கு அவ்வவ்வொற்றினையே ஆகும். இங்கே மற்றும் நோக்கற்பாலதொன்று உண்டு. அவ்வாசிரியர்,

" வன்றொடர் மொழியும் மென்றொடர் மொழியும்
வந்த வல்லெழுத் தொற்றிடை மிகுமே
மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற் றெல்லாம்
வல்லொற் றிறுதி கிளையொற் றாகும்."

என்றதிலே உணர்த்திய பொருளைப் புலவரும் ஊன்றி யுணர்தல் வேண்டும்.

1) கொக்குக் கால், குரங்குக் கால் என்பவற்றில் இரு மொழிக்கும் இடையில் மிக்கவொற்று; வந்த வல்லெழுத் தொற்று இடைமிகுமே என்றுணர்த்தப்பட்டது.

2) குரங்குக்கால் என்பது குரக்குக்கால் என்றும் ஆகும். ஆயின், அதில், வந்த வல்லெழுத்தொற்று மிகுதல் இரு மொழிக்கும் இடையில்; குரங்கு என்று நிறுத்த சொல்லின் இடையுள்ள ஙகரவொற்றும் ககரவொற்று ஆயிற்று. ஆகவே அதனை, மெல்லொற்றுத் தொடர்மொழி (குரங்கு) மெல்லொற்று (ங்) எல்லாம் வல்லொற்று இறுதி (இறுதி வல்லொற்று; அதாவது குரங்கு என்றதன் முடிவில் உள்ள உயிர்மெய்யான குகரத்தின் முதலாய் நிற்கும் ககரமெய்) ஆகும். குரங்கு–குரக்கு என்றாகும் இங்கு இறுதி வல்லொற்றாகும் என்றாரல்லது கிளையொற்று என்றார் அல்லர் ஆசிரியர் தொல்காப்பியர்.

3) குரக்குக்கால் என்பதற்கும் அற்புத்தளை என்பதற்கும் உள்ள வேறுபாட்டை அறிதல் வேண்டும். 'குரக்கு' 'அற்பு' என்பவற்றின் ஒற்று வேறுபாடே அறியற்பாலது. குரக்கு என்றதில்

ஙகரம் ககரமாயிற்று. ஏன் ஆயிற்று? ஈற்றில், ககரம் (வல்லெழுத்து) இருத்தலாலும் குறித்து வருகிளவியின் முதலெழுத்துச் சார்பிலும் ஆயிற்று. 'கலக்கு' முதலிய தனிமொழிகளிலும் இவ்வாறுதல் உண்டு. 'அற்பு' என்றதன் ஈற்றுயிர் மெய் முதலில் இருப்பது பகரமெய். அதனையொட்டி அப்பு என்றுயிற்றிலது. னகரமெய் பகரமெய்யாகத் திரியுமோ? அதன் கிளை றகரமேயாதலின் அக் கிளையொற்றுத் திரிந்தது. குரக்கு என்றது இனவொற்றுத் திரிபுடையது. அற்பு என்றது கிளையொற்றுத் திரிபுடையது.

இக்கட்டுரையில் விளக்கிய சொல்லாராய்ச்சியால், இவற்றினும் வேறுய திரிபுள்ளமை காண்க. கொள்பு-கொம்பு என்றதில் ஈற்றுவல்லொற்றிற்குக் கிளையொற்றுகிய மகரவொற்றுக ளகரவொற்றுத் திரிந்தது. (கொள்பு–கொம்பு). ளகரம் மகரம் ஆயின் அவ்விரண்டும் இனமும் அல்ல, கிளையும் அல்ல - காண்பு-காம்பூர்-பாண்பு-பாம்பு முதலியவற்றில், ணகரம், மகரம் ஆயிற்று. அவ்விரண்டும் இனமோ? கிளையோ?இரண்டும் அல்ல. நால்கு - நான்கு, நாங்கு. 'சிட்டருக்குப் பன்னுங்கில் தீதாகும்' என்பதில் லகரம் னகரம் ஆதலும் னகரம் ஙகரமாதலும், பால்கு-பாங்கு என்பதில் லகரம் ஙகரமாதலும் இனம் பற்றியும் கிளை பற்றியும் அல்ல. லகரத்திற்கு னகரமும் இனமும் கிளையும் அன்று. ஙகரமும் இனம் கிளை அன்று. வல்+தொடர், மெல்+ தொடர் முதலிய தொடர்களில், லகரம் னகரமாகி வன்றொடர் மென்றொடர் என்று ஆதலையும் கன்மனம், நன்மணம், வின்முனை முதலியவற்றிலும் அவ்வாறுதலையும் நோக்குக. தொல்காப்பியர் எத்தனையோ சொற்களுக்கு அமைதி கூறினுர். அவர் அன்று தொடங்கியதை இன்றும் தொடர்ந்து பின்வந்த சான்ருேர் அச் சொல்லாராய்ச்சியில் ஈடுபாடுற்றுச், செந்தமிழ்த் தாயின் வழக்கத்தைத் தெளியுமாறு காட்ட உளங்கொண்டு தம் புலமையின் பயனை நம்மனேர்க்கு உதவாராயினர்.

இதன் தலைப்பிற் குறித்த வெண்பாப் பொருள் உலகம் எல்லாவற்றையும் பெற்றும் காத்தும் அப் பெற்ற தாய் குமரியாகி இருந்தாள் என்பதே. இது முதற் கட்டுரையில் விரித்தெழுதப்பட்டமையால் இங்குச் சுருக்கி எழுதலாயிற்று.

"குமரர் முன்னிருவர் அமரர் அன்னை இவள்
குமரி இன்னமும் எனச் சித்தர் பாடவும்
................எழும் என் அம்மனை"

என அங்கயற்கண்ணியம்மை பிள்ளைத் தமிழிலும்

"எழு பெரும்புவனம் முழுதொருங் குதவும்
இறைவியென்று மறை கையெடுத் தார்க்கவும்
இடைநுடங்குமட நடையிளங் குமரி
என இருந்த கன கள்வி" எனவும்,

"தடங்கரை கொல் அலைப்பாய் புனற்றெண்
கடல் வைப்பும் அகிலாண்டமும் பன்முறையீன்றும்
அழகுமுதிர முதிராஎன் அம்மை."

எனவும் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழிலும்

"உலகம் ஒரேழும் பலமுறை பயந்தும்
முதிரா இளமுலை முற்றிழை மடந்தை"

எனக் காசிக் கலம்பகத்திலும் இதன் ஆசிரியரே பாடியிருத்தலை உணர்க. இதனுலும் இவ்விரட்டை மணிமாலையைப் பாடியருளி யவர் குமரகுருபரரே என்பது உறுதியாகும்.

சிவஞான போதத்தில் முதற் சூத்திரவுரையில், 'நோக்காது நோக்கி' என முதலும் வெண்பாப் பொருளில், "பிரபஞ்சத்தைக் கரணத்தாற் படையாது சங்கற்ப மாத்திரத்தானே படைத்து அவ்வாறே காவாது காத்து அழியாது அழித்தலால் இவ்வமல னுக்குப் பந்தம் இன்று" என்று மாதவச் சிவஞான யோகிகள் உரைத்தருளியதை நோக்குவார்க்கு ஜகதம்பா பாலாம்பாவே என் பது தெளிவாகும். அறிவால் எல்லாம் படைக்கப்படுகின்றன. படைக்கும் அவ்வறிவிற்கு இளமை முதுமை முதலிய விகாரங் கள் உளவாமோ? ஆகா. இவ்வுண்மையே 'ஞாலமெலாம் ஈன் றளித்தும் குமரியாகியிருந்தாள்' என்றதன் உட்கிடை.

'ஈன்று' :— ஈனுதல் உயர்திணைக்குரிய சொல்லன்று. திருவள்ளுவரும் 'ஈன்றுள், ஈன்ற பொழுது, 'ஈன்று' 'ஈன்ற' என்று உயர்திணைக்கு ஆண்டார். 'ஈன்மரோ இவ்வுலகத்தானே' (74)

எனச் சேரமான் கணைக்காலிரும்பொறையும் 'ஈன்ற வயிறோ இதுவே. தோன்றுவன்மாதோ போர்க்களத்தானே' எனக் காவற் பெண்டும் பாடிய புறப்பாட்டும் இச்சொல்லை நமக்கு ஈய்ந்தவாறறிக. ஈன்றல்–இங்குறுத்தல். 'ஈன்' (தொல். எழுத்து 334.) 'தலையீற்று', 'இரண்டாம் ஈற்று', 'தலையீற்றுப் பசு' என்னும் உலக வழக்காலும், தலையீற்றுப் பெண் என்பது போல வழங்கல் இன்மையாலும், 'பெற்றாள் பெற்றிருக்கிறாள், பேறுகாலம், பெற்றவயிறு' என்னும் வழக்கு (உயர்திணைக்கு) உள்ளமையாலும், கன்னடத்திலும் தெலுங்கிலும் அஃறிணைக்கே இச்சொல் வழங்கலாலும் தமிழில் இதன் தொல்வழக்கு நன்கு புலப்படும். "என்னை ஈன்றாள் மலடி என்பது போலாம்" என் றெடுத்துக் காட்டுதலும் உண்டு.

(தொடரும்)

ராகம் : சித்தரஞ்சனி ஆதிதாளம்

பல்லவி

செந்தில் பதியில் வாழும் கந்தா
உன்னை காண இருகண்கள் போதாதே

அநுபல்லவி

கடலலை ஓசைகேட்டு மகிழும் உன்செவிகள்
என்கவிமலர் இசைகேட்டு மன மிறங்காதோ (செந்)

சரணம்

வள்ளி மகிழும் தெய்வ மோகனனே
நீல வண்ணமயில் வாகனனே
என் சிந்தையில் வாழும் திருமால் மருகா
பல் துன்பங்கள் தீர்த்திட வா முருகா (செந்)

சு. விஜயாம்பிகை,
ஸ்ரீவைகுண்டம்.

திருமந்திரம் TIRUMANTIRAM

ஐந்தாம் தந்திரம் Tantra the Fifth

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,
Member, Legislative Assembly,
MADRAS-31.

மலர் 16. இதழ் 9-ன் தொடர்ச்சி

The Lord appeareth by Love entwined

பேரன்பால் பின்ன இறைவன் தோன்றுகின்றான்

87. அண்ணலை வானவர் ஆயிரம் பேர்சொல்லி
உன்னுவர், உள்மகிழ்ந்து, உள்நின்று, அடிதொழக்
கண்ணவன் என்று கருதும் அவர்கட்கு,ப்
பண்ணவன்; பேரன்பு பற்றி நின்றானே.

The Celestial Beings seeketh the Lord
Chanting His glory in names thousand;
They that adoreth His Holy Feet
In the abiding rapture of their hearts,
And hold him as their eyes' apple
-Unto them, is He sweet music itself,
And to them He appeareth by divine love
entwined.

இறைவனைத் தேவர்கள் ஆயிரம் நாமம் சொல்லி வாழ்த்துகின்றனர். எவர் ஒருவர் உள்ளத்திலே களி கூர்ந்து, கண் போன்றவனே என்று அவனை உறுதியோடு கருதுகின்றனரோ-அவர்கட்கு அவன் ஏழிசையை ஒத்த இனியவனாக இருக்கின்றான், பேரன்பால் தன்பால் இழுத்து ஆட்கொள்கின்றான்,

Unless thine heart be rid of impurities Thou seeth not the Lord

உள்ளத் தூய்மை யில்லாதவர்க்கு இறைவனை அடைய வொண்ணுது

88. வாசித்தும், பூசித்தும், மாமலர் கொய்திட்டும்
பூாசிக்குளத்தில் வீழ் கல்லா மனம் பார்க்கின்,
மாசற்ற சோதி மணி மிடற்றண்ணலை
நேசத் திருந்த நினைவறி யாரே.

What availeth it
That thou read the scriptures,
Performeth pujas,
Gathereth flowers in cluster
-As long as thine heart is unto a pebble
Drop it into a dark pool
Over spread with moss of ignorance,
Thou canst not realize
The Lord that is in thine hearts' love;
-The Lord that is blue-throated
He, the Pure Light.

வேதாகம சுருதி நூற்களைக் கற்றும், பூசைகள் செய்தும், நறுமலர் பறித்து அருச்சனை செய்தும், மனமானது அறியாமை என்னும் பாசி படர்ந்த குளத்துள் விழுந்த கல்லினைப் போலி ருக்குமானுல், உள்ளத்தின் அன்பிலேயே வீற்றிருக்கும், மெய் யொளியாகும், கறை மிடற்றுப் பெம்மானை எவ்வாறு அறிதற்கு முடியும்!

The Path of Love by successive stages leadeth to Finite Beatitude

அன்புநெறி படிப்படி பரமுத்தியில் உய்விக்கின்றது

89. சாலோக மாதி சரியாதி யில்பெறும்;
சாலோகம் சாமீபம் தங்கும், சரியையால்;
மாலோகம் சேரில் வழியாகும் சாருபம்;
பாலோகம் இல்லாப் பரனுரு வாமே.

The four stages of attainment
Saloga, Samipa, Sarupa and Sayujya
Are in gradation reached through Sariya;
The path of Sariya leadeth to Saloka;
And that in turn to Samipa;
And Samipa then showeth the way to Sarupa;
And ultimately to Para of Infinite Space
Beyond which there is state none.

சரியை என்னும் அடிமுதல் நெறியால் சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய நிலைகள் முறையே ஒன்றிலிருந்து ஒன்று பெறும் சரியையால் வரும் சாலோகம், சாமீபத்தில் உய்க்கும்; அந்தச் சாமீபம் சாரூப நிலைக்கு வழி திறக்கும். சாரூபத்திலிருந்து பரத்தோடு கலக்கும் நிலை பிறக்கும்.

குறிப்பு;

வரி: 1. *சரியாதி – சரியையை அடிமுதலாய்க் கொண்டு*

2. *சரியையால(வரும்)சாலோகம் சாமீபம் (சாமீபத்தில்) தஙகும (தஙகவைககும) என்று கூட்டுக*

3. *மாலோகம-சாமீப உலகம்*

4. *பாலோகம (பால் + ஓகம்) – திசைப்பெருக்கம்*

பாலோகமில்லா என்பது எல்லையற்ற பரவெளியைக்குறித்தது.

(தொடரும்)

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரமபரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணாவதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க் கண்ட முகவரிக்கே அனுப்பிவைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்,

உள்நாடு ரூ. 2 – 25 * வெளிநாடு ரூ. 3 – 00

செயலாளர். "ஞானசம்பந்தம்" அச்சகம்.

தருமபுரம், மாயூரம் P. O.

முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்

உ ரை ந டை

பாலகவி வயிநாகரம்,

திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,

தேவகோட்டை.

(மலர் 16. இதழ் 9-ன் தொடர்ச்சி)

கும்பம தக்களி யானையி ரண்டே யொன்றேமைக்
கொண்டல்வி ழிக்கயன் மீனுமி ரண்டே கொண்டேகிச்
சம்பர னைப்பொரு சேவகன் வந்தான் வந்தான்முற்
சண்டைகொ ளற்கென நேர்வரு பெண்பா லன்பாயே
அம்பவ ளக்கொடி யேவளா கொம்பே யென்றேநீ
அன்றுபு னத்துயிர் சோர்வது கண்டே முன்போதும்
கம்பம தத்தர்ச கோதர செங்கோ செங்கீரை
கந்தபு ரிக்கரு ணைநிதி செங்கோ செங்கீரை. 20

குடங்களை ஒத்த கொங்கைகளாகிய மதம் பொருந்திய களியானைகள் இரண்டையும், கூந்தலாகிய கரியமேகம் ஒன்றையும், விழிகளாகிய கயல் மீன்கள் இரண்டையும் கொண்டு சம்பராசுரனைப் போர்செய்து வென்ற வீரனாகிய மன்மதன் வந்தான், முன்போலச் சண்டை செய்வதற்கென்று சொல்லும்படி நேரே வந்த பெண்ணாகிய வள்ளி நாயகியின் பால், அன்பு ஆகி "அழகிய பவளக் கொடியே! வளர்கின்ற பூங்கொம்பே!" என்று நீ, அந்த நாளில் தினைப்புனத்தில் உயிர் சோருவதைக் கண்டு, உங்கள் முன்வந்த பெரிய மதத்தை உடையவராகிய விநாயகப் பெருமானுக்குச் சகோதரனே! செங்கீரையாடி யருளுவாயாக. கந்தபுரியில் எழுந்தருளியுள்ள கருணைநிதியே! செங்கீரையாடி யருளுவாயாக.

திங்கணு தற்றிரு மாதொடு நின்றே மன்ருடும்
செங்கண்வி டைக்கொடி யோனருள் கன்றே யொன்றேயாய்
எங்களு ளத்தமு தூறுக ரும்பே யன்பாளர்க்
கின்பம ளிக்குமெய்ஞ் ஞானம ருந்தே யெந்தாயின்
கொங்கலர் மைக்குழல் வாழ்பொறி வண்டே வண்டூதும்
கொந்தள கக்குற மான்வளர் குன்றே யென்ருேதும்
கங்கைம கட்கொரு கான்முளை செங்கோ செங்கீரை
கந்தபு ரிக்கரு ணைநிதி செங்கோ செங்கீரை. 21

பிறைத் திங்களை யொத்த நெற்றியை யுடைய மேலான சிவகாமி யம்மையுடன் நின்று, அம்பலத்தில் ஆடுகின்ற, சிவந்த கண்களை யுடைய இடபம் பொறித்த கொடி யுடைய வணுகிய சிவபெருமானது மைந்தனே! ஒருவனேயாக இருந்து எங்கள் உள்ளங்களிலே அமுதூறுகின்ற கரும்பு போன்றவனே! அன்புடையவர்களுக்கு இன்பமளிக்கின்ற மெய்ஞ்ஞான அமுதமே! எமது அன்னையாகிய உமாதேவியின் நறுமணம் வீசுகின்ற கரிய கூந்தலிலே, சிவபெருமான் அவருக்கு வேதாகமங்களை உபதேசித்த பொழுது, அவற்றைக் கேட்டுணர்ந்து கொள்ளுவதற்காக உருமாறித் தங்கியிருந்த புள்ளிகளை யுடைய வண்டே! வண்டுகள் ஊதுகின்ற பூங்கொத்துக்கள் முடித்த கூந்தலை யுடைய குறவர் மகளாகிய வள்ளி யென்னும் மான் வளருகின்ற மலையே! என்று பாராட்டுகின்ற கங்கை யன்னைக்கு ஒப்பற்ற மைந்தனே! செங்கீரை யாடி யருளுவாயாக. கந்த புரியிலெழுந்தருளியுள்ள கருணை நிதியே! செங்கீரை யாடி யருளுவாயாக.

தாலப் பருவம்

பில்கும் பசுந்தே னசும்பிருந்த
பின்ரு ழளகத் தரமகளிர்
பேதைக் குறும்பு விளையாடும்
பேராயத்துச் சிறுமருங்குற்
கொல்குங் கொடிபோய் நுடங்கியிட
ஓங்கும் பளிக்கு நிலாமுற்றத்
துயர்தூ ளிகையின் மரகதத்தின்
ஒளிகால் வீசத் தெளிவிசும்பிற்

பல்குஞ் சுரபி தரங்கநெடும்
பாகீ ரதியின் கரைக்கிளைத்த
பசும்புல் லெனச்செந் நாவளைக்கும்
பைம்பொற் றலங்கள் பலகோடி
மல்குஞ் செல்வக் கந்தபுரி
வாழ்வே தாலோ தாலேலோ
மலையாள் வயிறு வாய்த்தமுழு
மணியே தாலோ தாலேலோ. (22)

துளிக்கின்ற பசியதேன் வழுக்கலையுடைய பின் தாழ்ந்த கூந்தலைக் கொண்ட இளநங்கையர், பேதைப் பருவ விளையாட்டயரும் பெரிய கூட்டத்திலே, அவர்களது சிறிய இடைக்கு மென்மையினாலும், துவட்சியினாலும் தோற்று அசைகின்ற, பூங்கொடிகள் சென்று படர, ஓங்கியிருக்கும் பளிங்கு நிலா முற்றத்தில் உயர்ந்த உச்சியறையின் மேல் பதித்த பச்சை ரத்தினங்களின் ஒளி வெளிப்பட்டு வீசத் தெளிவான ஆகாயத்திலே வாழுகின்ற காமதேனு என்னும் பசு, அலைகளையுடைய நெடிய கங்கைக் கரையிலே கிளைத்த பசும்புல்லென எண்ணிச், சிவந்த நாக்கினாலே வளைக்கின்ற பசிய அழகிய இடங்கள் பலகோடி நிறைந்துள்ள செல்வம் மிக்க கந்தபுரியின் வாழ்வே! தாலோ தாலேலோ. மலைமகளாகிய பார்வதி தேவியின் மணி வயிறு வாய்த்த முழுமணியே! தாலோ தாலேலோ.

(தொடரும்)

உ
திருச்செந்திலாண்டவன் துணை

'குமரகுருபரன்'

திங்கள் வெளியீட்டின் சந்தா நேயர்களுக்கு ஓர் அறிவிப்பு:

தனிப்பிரதி (உள் நாடு)	0–13 ந. பை.
வருடச் சந்தா	ரூ. 1–50 ந. பை.
வெளி நாடு வருடச் சந்தா	5 ஷிலிங் அல்லது ரூ. 3–25 ந. பை.

நிர்வாக ஆசிரியர்.

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலா 16, இதழ 9-ன் தொடர்ச்சி]

II

THIRUNAVUKKARASU SWAMI

(More commonly referred to as APPARSWAMI)

61. உழையுரித்த மானுரிதோலாடையானே
யுமையவடம்பெருமானே யிமையோரேறே
கழையிறுத்தகருங்கடனஞ்சுண்டகண்டா
கயிலாயமலையானேயுன்பாலன்பர்
பிழைபொருத்தியென்பதும் பெரியோய்நின்றன்
கடனன்றே பேரருளுன் பாலதன்றே
அழையுறுத்து மாமயில்களாடுஞ்சோலை யாவடு
தண்டுறையுறையுமமரரேறே.

Whatever karma may teach of the inevitable consequence of evil, devotees hold that they may count on receiving divine forgiveness, for which the gracious nature of God is a sufficient pledge and guarantee.

61. Thy throat the black sea's poison drank, as 'twere ambrosia sweet,
O deer-skin wearer, Uma's lord, king of the gods on high;
Kailasa's hill is Thine abode, and when Thy lovers cry
" Forgive our sin," great One, forgiveness is Thy duty meet;
For with Thee is great grace, lord of celestial beings all,
Who dwell'st in Avaduturai, where peacocks dance and call.

Reproduced with the kind permission of Oxford University Press, Calcutta.

(N.B. Copies available for sale at the above Press.)

திரு இராமேச்சுரம்

தேவாரமணி, திரு. சட்டையப்பன் அவர்கள்.

நமது நாட்டிலே புண்ணிய தலங்கள் பல; புண்ணிய தீர்த்தங்கள் பல; புண்ணிய தினங்கள் பல. 'மூர்த்தி, தலம், தீர்த்தம்' என்பன ஒரு தொடர். புண்ணிய தீர்த்தங்களிலே நீராடிப் புண்ணிய தலங்களிலேயுள்ள மூர்த்தியைத் தரிசித்து வணங்குவதால் சித்தசுத்தி உண்டாகுமென்று நவின்றனர் நல்லோர்.

காசியிலே கங்கை நீராடி விசாலாட்சி சமேத விசுவநாதரைத் தரிசித்து வழிபடுவதும், கௌரியம்மை சமேத கேதாரநாதரைத் தரிசித்து வழிபடுவதும், மிகுந்த புண்ணியம் விளைவிக்கும் என்பதை எல்லோரும் அறிவர். அதுபோலவே இராமேச்சுரத் தலத்திலே உள்ள சேதுதீர்த்த நீராடி பர்வதவர்த்தனி சமேத ராமநாதரை வழிபடுதல் மிக்க புண்ணியமாகும். கங்கை நீராடுவோர், கங்கையைக் கொண்டுவந்து இராமநாத சுவாமிக்கு அபிடேகம் செய்து வழிபடுவதே சிறந்த புண்ணியப் பயன் என நம்பி, அவ்வண்ணமே பத்தர்கள் பலர் செய்து வருகின்றனர். காசிக்குச் சென்று வந்த பலன் இராமேச்சுரம் சென்று தரிசித்தால்தான் நிறைவு எய்தும் என்பதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

நல்லார் அறஞ்சொல்ல, பொல்லார் புறங்கூற, அல்லார் அலர்தூற்ற எல்லார்க்கும் அருள் செய்யும் நாதன் (சிவன்) இத் தலத்தில் ராம–நாதனாக இருக்கிறான்.

அவனை–அந்தச் செம்மேனி யெம்மானைத் திரைகள் (அலைகள்) முத்துக்களைக் கொண்டு வந்து வீசி வணங்குகின்றனவாம். இதை,

"திரைகள் வந்துமுத்தால் வணங்குந்
திருஇரா மேச்சுரம்"

என்று பாடுகின்றார் நாவரசர் பெருமான். அடியார்கள் மலர் களைத் தூவி வணங்குவது போல அலைகள் முத்துக்களைத் தூவி வணங்குங் காட்சி இன்றும் கண்கூடாகக் காணலாம்.

சைவ சமய குரவர்கள் பசுபோதம் நீங்கிச் சிவபோதமே மேலிட்டுத் தஞ்செயல் அற்றுச் சிவனேயாய் நின்றவர்கள் ஆதலினாலே எல்லாம் சிவச் செயலாகவே நிகழ்ந்தன. இதை,

"நஞ் செயலற்றிந்த நாமற்றபின் நாதன
தன் செயல்தானே யென்றுந் தீபற
தன்னை யேதந்தா னெனறுந் தீபற"

என்ற திருவுந்தியாரால் உணரலாம்.

தீவிரதர சத்திநி பாதமுடையவர் திருநாவுக்கரசர்; சிவ பெருமானது திருவருளினாலே மல இருள் நீங்கிச் சிவத்துவம் விளங்கப் பெற்றவர்; சிவானந்தம் மேலிட்டுச் சீவன் முத்தராய் இருந்தவர். இவர் சிவானந்த விளக்கமுடையவர் என்பதை நாம் இவரது திருப்பாடல்களிலே காணலாம். இடையறாது ஞானப் பாடல் தொடையறாது பாடுதலில் இவர் வல்லவர் என்பதை, ஆனந்த அருவி பொழிவதிலே-புளகமுண்டாதல், விம்மல், தழு தழுத்தல், பரவசமடைதல் ஆகிய நிலையினைக் காணலாம். நில வுலகிலேயுள்ள ஆன்மாக்களை ஈடேற்றும் பொருட்டு சஞ்சரிக் கும் இயல்பினராய இந்த நாவரசப் பெருந்தகையார் பதிகப் பயன் கூறுமிடங்கள் இரண்டேயிடம்தான். ஒன்று 'சொற் றுணை வேதியன்' எனத் துவங்கும் பதிகத்தின இறுதிப் பாட லான 'மாப்பிணை தழுவிய' என்பது; மற்றொன்று 'பாசமும் கழிக்க' எனத் துவங்கும் பதிகம்-இதுவே திரு இராமேச்சுரத் தலத் திருநேரிசை, இதன் இறுதிப் பாடல் 'வரைகளொத்தே யுயர்ந்த' என்பதாகும்.

"வரைகளொத்தே யுயர்ந்த மணிமுடி யரக்கர்கோனை
விரையமுற்றற வொடுக்கி மீணடுமால் செயதகோயில்
திரைகள் முத்தால் வணங்குந்திரு விராமேச்சுரத்தை
உரைகள்பத்தால் உரைப்பார் உள்குவார் அன்பினாலே"

"வாரணம் பொருத மார்பையும், வரையினை எடுத்த தோளையும்" உடையவன் இராவணன் என்று வானும் வையமும் புகழ்ந்து கூறும்.

கருவரைசூழ் கடல் இலங்கையர் கோன் கயிலை மலையைத் தூக்க முடியாத நிலையில் சிக்கிக் கலங்கிய பின் தெளிந்து இனிய இன்னிசை பாடி இறைவனிடம் அரிய வரங்களைப் பெற்ற அதிசயததை அப்பர்-ஞானசம்பந்தர்—சுந்தரர் போன்ற வர்கள் பாடுகின்றனர்.

ஆன்மாவுக்கு ஆணவமல பரிபாகத்திலே தீவிரதர சத்திநி பாதம் உணடாம். அப்போது சிவபெருமான் தமது திருவருளால் சிவஞானத்தை உதிப்பிப்பார்; சிவானந்தப் பெருவாழ்வை நுகரச் செய்வா; மேலே வரக்கூடியதாம்–பிறப்புக்கு ஏதுவானதெனக் கூறுகின்ற சஞ்சித வினைகளை, ஆகாமிய வினைதனைக் கெடுப் பர்; எடுத்த உடம்பிலேயே பிரார்த்தத்தைப் புசிக்கச் செய்வர்; சீவன் முத்தராக வைத்துத் தேகாந்தத்திலே பரமுத்தியைக் கொடுத்து அருளுவர். இதை சிவஞான சித்தி "சித்தாந்தத்தே சிவன்தன திருக்கடைக்கண் சேர்த்தி" எனக் கூறும்.

திரோதன சத்தி நீங்க அநுக்ரக சத்தி பதிதலையே சத்திநி பாதமென்பர். இந்த அரும்பெரும் நிலையிலே நின்று அரனடிக் குப் பாமாலை சூட்டியவர்கள் நம் சமயகுரவர்கள்.

"இலங்கை யென்னும் பதியிற் பொலிவாய அரக்கர்க் கிறைவன் முடியுந் தோளும் அணியார் விரல் தன்னால் நெருக் கியடர்த்து 'நிமலா! போற்றி!' யென்று நின்றேத்த இரக்கம் புரிந்தார்" என்று உமையொரு பாகனும் ஈங்கோய் மலையாரைப் பாடுமுகத்தான் விளக்குகின்றார் ஞானசம்பந்தர்.

"மலையைக் கையால் உலங்கிளர எடுத்தவன் தோள்முடி யும் நோவ, ஒரு விரலால் உறவைத்தார்; 'இறைவா!' என்று புலம்புதலும் அருளொடு போர்வாளும் வைத்தார்" என்று நல்லூர் பெருமானிடம் நன்றி செலுத்துமுகததான் நயம்படப் பாடுகின்றார் நாவுக்கரசர்.

"எறியுமா கடல் இலங்கையர் கோனைத் துலங்க மால் வரைக் கீழ் அடர்த்திட்டுக் கோலவாளோடு நாளது கொடுத்த செறிவு" என்று திருப்புன்கூர் மேவிய சிவலோகனது திருவடியைச் சிறப்பிக்கு முகத்தான் விளக்குகின்றார் சுந்தரர்.

இராவணன் மூன்று கோடி வாழ்நாள் உடையவன் என்பதை ஞானபோனகர்,

"எண்ணின்றி முக்கோடி வாணாளது உடையானைப், புண் ஒன்றப் பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே" என்று குறிப்பிடுகின்றார். ஆனால், அந்த இராவணன் கதி?

"ஏக நாயகன் தேவியை எதிர்ந்ததன பின்னை
நாகர் வாழ்விட முதலென நான்முகன் வைகும்மாக
மால் விசும்புறா றென நடுவன வரைப்பின்
தோகை மாதர்கள மைந்தரின தோன்றினர் சுற்ற"

(*சுந்தர, பிணி — 45*)

சீதையைக் கண்டது முதல் அவன் மனம் மாறிவிட்டது. உலகில் உள்ள எந்த அழகியும் அழகியாகத் தோன்றவில்லை; எல்லோரும் ஆடவராகவே தோன்றினர் இராவணனது கண்களுக்கு.

"முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய
பெருந்தவமும் முதல்வன முன்னாள்
எக்கோடி யாராலும் வெல்லப்படாய்
எனக்கொடுத்த வரமும் ஏனைத்
திக்கோடும் உலகனைத்தும் செருக்கடந்த
புயவலியும் தினறு, மார்பில்
புக்கோடி உயிரபருகிப்புறம் போயிற்று
இராகவன் தன்புனித வாளி."

(*கம்பன்*)

அரிய பெரிய தவஞ் செய்தவன்–தேவர் முதல் யாவரையும் வென்றவன்–வீரத்திலே, வெற்றியிலே மிகவும் புகழ் அடைந்தவன், ஏன் மாண்டான்?

சீதையிடம் கொண்ட காதல் நோயும், இராமபிரான் கொண்ட கோபமும் அவனை மாள வைத்தது! இதை,

"காதல் நோயும் நின்முனிவும்
அல்லால் வெல் வாரோ?

என்று விபீடணன் கூற்ருகக் கம்பன கவிதை பாடுகின் ருன். சீதை மேல் வைதத காதலே இராவணன் சாதலுக்கு மூலகாரணம். அதுவல்லாது அவனே வெல்லுதல் இயலாது!

“செவிகைப்பச் சொற்பொறுக்கும் பணபுடை வேந்தன்
கவிகைக் கீழ்தஙகு முலகு”

என்று இறைமாட்சியிலே வள்ளுவர் கூறுகின்ருர்.

இலங்கையரசன் – இராவணன் அந்தப் பண்பிற்கு நேர் மாருனவன். அதுவும் ஒரு காரணம், அவனது அழிவுக்கு - இழி வுக்கு – இறுதிக்கு!

இராவணன் ஒரு முறை கந்தர்வலோகம் செல்கிருன்; ஆங்குள்ள அழகிய மங்கையரைக் கவர்கின்ருன்; எடுத்து வரு கின்ருன் இலங்கைக்கு. மூவுலகாண்ட அவன், ஏகபோகமாக ஆளும் ஆசையோடு தேக போகததையும் அடைந்து அதிலே மூழ்கி முறை துறந்தான்; வழி தவறிருன்; அதனுல் அவன் அகாலமாய் உயிர் துறந்தான. இதுவும் ஒரு காரணம்.

கடியிலங்கைக் கோமானுல் கவரப்பெற்றக் கன்னியரின் தாயாரெல்லாம்,

“அன்ன நடையார் பொருட்டால் அடல்இலஙகை
பாழாகி அரக்கர் கோமான
தன்னுடைய முடியோடும் தலையறறுவிழுக” (திககுவிசய, 94)

என அவனேச் சபித்துவிட்ட சாபமும் ஒரு காரணம்.

இலங்கையை எரிமூட்டிவிட்டு அனுமன் சென்றபின், இலங்கையரசவையில்–இராவணன் ஆலோசனே செய்த நேரம்,

“தனனின முனனிய பொருள்இலா ஒரு தனித்தலேவன்
அனனமானுடன் ஆகிவந்து அவதரித்து அமைந்தான்”

என்று விபீடணன் கூறுகின்ருன். அதையும் மறந்தான். இது வும் ஒரு காரணம், பரகதும் பெருமையுடைய இலங்கை மன்னன் இறப்பதற்கு. எனவே,

“திரைகெழு பயோத்தி துயிலும்
தெயவவான் மரகத மலே” (பால, அவதார, 12)

போன்றிருந்த பெருமான், அறமே உருவாய் வந்து இராமனென வாழ்ந்து இலங்கை வேந்தனும் இராவணனை ஈடழித்தார்.

வென்று பெறுவது வெற்றி!
கொன்று கொள்வது கொற்றம்!

அநீதியை, அந்த இனத்தவரை வென்றல்ல; கொன்று கொண்ட திறமே இராமபிரானது கொற்றம்.

அந்தக் கொற்றத்தின் சின்னம் இராமன் 'நாதனுக்கு' அமைத்த கோயில்.

அதுவே 'இராமேச்சுரம்'

''மலைகளைக் கொண்டு கடலில் அடைத்து நீரை அகற்றித் திடலான இடத்தில் இராமன் செய்த கோயில் 'இராமேச்சுரம்'

''வாக்கினால் இன்புரைத்து வாழ்கிலார் அரக்கர்களைப் போக்கினால்–புனித வாளியால் அழித்துத் தேக்கமுள்ள நீரில்–மால் (இராமன்) செய்த கோயில் 'இராமேச்சுரம்'' என்பார் அப்பர்.

''தேவியை வவ்விய தென்னிலங்கைத் தசமாமுகன்
பூவியலும் முடிபொன்று வித்தபழி போயற
ஏவியலுஞ் சிலையண்ணல் செய்த இராமேச்சுரம்
மேவிய சிந்தையினார்கள் தம்மேல் வினைவீடுமே''.

''சனிபுதன் ஞாயிறுவெள்ளி திங்கள் பலதீயன
முனிவது செயதுகந்தானை வென்று அவ்வினைமுடிட
இனியருள் நல்கிடென்று அண்ணல்செய்த இராமேச்சுரம்
பனிமதி சூடிநின்ற டவல்ல பரமேட்டியே''.

என்றெல்லாம் ஞானசம்பந்தப் பெருமான் பதிகம்பாடி இராவணனைக் கொன்ற பெரும் பழியை–அதனால் வந்த வினையை நீக்கிக் கொள்ள இறைவனை வழிபட்ட இராமனது வழிபாட்டை விளக்குகின்றார்.

இத்தகைய பெருமையையுடைய இராமேச்சுரம், பாண்டிய நாட்டுப் பதியான பதினான்கிலே எட்டாவதாக விளங்குவதாகும்.

பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்களிலே ஒன்று இராமலிங்கம். இத்தலம் மதுரைக்குத் தென்கிழக்கே நூறு கற்றொலைவிலே

யுள்ளது. இராமேச்சுரம் புகைவண்டி நிலையம் உள்ளது; அங்கிருந்து ஆலயம் ஒரு கல்.

இராமர் வழிபடுவதற்கெனக் காசியிலிருந்து சிவலிங்கம் கொண்டுவரச் சென்ற ஆஞ்சநேயர், வருவதற்குக் காலந் தாழ்ந்தமையால் மணலால் குவித்து லிங்கமாக வழிபட்டார் இராமர். அதுவே 'இராமநாதர்'. பின்னர் அனுமன் கொண்டு வந்த இலிங்கம் 'காசி விசுவநாதர்' என்ற நாமத்தோடு இராம நாதரின் வடபக்கம் விளங்குகின்றது. முதலில் இவருக்கே வழிபாடு நிகழ்கின்றது.

வடக்கே மூன்றுவது கல்லில் இருக்கிறது கந்தமாதன பர்வதம். ஆலயத்திலே சேதுமாதவர் சந்நிதி தனியாக உள்ளது. வடக்குப் பக்கம் பிரகாரத்திலே விபீடண, கற்பூர, ஜோதிர்லிங்க, நடராசர் முதலியன இருக்கின்றன. தீர்த்தங்கள்: 'இராம, லக்குமண, ஆஞ்சநேய, சுக்ரீவ, பஞ்சபாண்டவ' என்ற பெயரிலும், கோடிதீர்த்தம் கோயிலுக்குள்ளும், அக்னி தீர்த்தம் சந்நிதிக்கெதிரே கடலாகவும் மிக முக்கியமாக விளங்குகின்றன.

தனுஷ்கோடி! — இராமேச்சுரத்துக்குத் தெற்கே பன்னிரண்டாவது கல்லில் உள்ளது.

"செங்கண்மால் சிலைபிடித்து சேனையோடும்
சேது பந்தனஞ் செய்து............" (அப்பர்)

இலங்கை செல்ல இராமன் அணை கட்டிய இடம் இது; 'ஸேது தீர்த்தம்' இராமன் தனுசு (வில்) முனை கொண்டு தோற்றுவித்த தீர்த்தம். சிறப்பான தீர்த்த கட்டம் இது; தனுஷ்கோடி புகைவண்டி நிலையத்திலிருந்து இரண்டுகற்றொலைவில் உள்ளது.

இராமேச்சுரத்து அம்மையின பெயர் 'பர்வதவர்த்தனி' (மலைவளர் காதலி). இநத அமமையை வாயாரப் புகழ்ந்து பாடுகின்றார் தவயோகியாம் தாயுமான அடிகள் :

"பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
புராந்தகி த்ரியம்பகி யெழில்
புங்கவி விளங்கு சிவசங்கரி சகஸ்ரதள
புஷ்பமிசை வீற்றிருக்கும்

நாரணி மனுதீத நாயகி குணதீத
நாதாந்த சத்தி எனறுன்
நாமமே உச்சரித்திடு மடியர் நாமமோ
நானுச்சரிக்க வசமோ
ஆறணி சடைக்கடவுள் ஆரணி எனப்புகழ
அகிலாண்ட கோடி யீன்ற
அன்னையே பின்னையுங் கன்னியெனமறை பேசும்
ஆனந்த ரூபமயிலே
வாரணியும் இருகொங்கை மாதர் மகிழ்கங்கைபுகழ்
வளமருவு தேவை யரசே
வரைராசனுக் கிருகண் மணியாய் உதித்தமலை
வளர் காதலிப் பெண்ணுமையே"

காஞ்சிபுரம் சிதம்பர முனிவர், ரத்னச் சுருக்கமாகப் பல தலங்களிலே குடிகொண்டருளும் குகனைப் பாடுவார்; அந்தந்தத் தல வரலாற்றையும் கூட்டிக் குழைத்துப் பாடுவார்; அவர் பாடிய பாக்களெல்லாம் 'க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத் தமிழ்' எனப் பெயர்பெறும்.

சேதுராமேச்சுரங் குடிகொண்ட முருகனைச் செங்கீரை யாடி யருளுமாறு சித்த முருகிப் பாடுகின்றார்:

"சச்சிதானந்த வனந்த கல்யாண குண
சருவக்கிய சூடாமணி
சருவ பரிபூர்ண பரப்பிரம்மமே பெரிய
தற்பரஞ்சோதி வடிவே
அச்ச மொன்றில்லா வசஞ்சலவ மோகமே
அகண்ட பரஞான வொளியே
அறிவினுக் கறிவே யனுதிய களங்கமே
அமுதமதி கோடி யொளியே
நிச்சய மகோதய அனந்தரவி சோதியே
நிர்க்குண நிராதாரமே
நிராமய புராதன நிரஞ்சன சுகாதீத
ஞேயமாம் அத்துவிதமே
செச்சைமலர் மாலையணி பன்னிருபுயா சலா
செங்கீரை யாடியருளே
சேதுரா மேச்சுரங்குடி கொண்ட முருகனே
செங்கீரை யாடியருளே."

முற்றும்

உ

திருச்செந்திலாண்டவன் துணை

திருவாசக அநுபூதி உரை*

(சீகாழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

திருச்சதகம் — பத்தாம் கொத்து

இனி, பத்தாம் கொத்து தோத்திரம் செய்யவும், மன முருகவும், பேரின்பத்தைப் பெறவும், பாசத்தன்மை நீங்கவும், யானெனதென்பதறவும், இன்ப சுகம் கிடைக்கவும், அனுக்கிர கமே வரமென்று உணர்த்தும் சிவசத்தி யனுபூதி. இறைவன் சீரடியார்க்கருளின்ப வைப்பானவன் என்ற திருவருள் விநியோக மாவன :—

அப்ப னேயெனக் கமுத னேயா னந்த னேயக நெகவள் ளூறுதேன்
ஒப்ப னேயுனக் குரிய அன்பரில் உரிய னுயுனைப் பருக நின்றதோர்
துப்ப னேசுடர் முடிய னேதுணை யாள னேதொழும் பாள ரெய்ப்பினில்
வைப்ப னேயெனை வைப்ப தோசொலாய் நைய வையகத் தெங்கள் மன்னனே.

(இ - ள்). எனது ஆன்மநாதனே! அமிர்தே! சிவானந்தனே! என் உள்ளங்கனிந்து இன்பமூறுந் தேனே! கருணையொப்புடையோய்! அடியார்க்கடியனுக்கி அப்பணியருளால் திருவடியின்பம் புசிப்பதாக அருளும் ஆனந்தபரிசுத்தனே! ஞானம் பிரகாசிப்ப தான மகுடசடையனே! என்னுடைய தோழனே! தோன்ருத் துணையான ஆண்டவனே! அடிமைப் பணி செய்யும் சீரடியார்க்கு அருள்வைப்பே! அடியேனை இவ்வுலகத்தில் வைத்துத் தேவரீர் பிரிவாக விருப்பது திருவுளமோ? எங்கள் நாதனே! — என அருளியதைக் காண்க.

---

* இவ்வரிய நூலைப் பதிபபித்த சென்னை—திருவான்மியூர், மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே சாமிநாதையர் அவாகள் நூல் நிலையத தாரின் அனுமதி பெறறு இது வெளியிடப பெறுகினறது இதன் விலை ரூ. 13/- ஷை நூல நிலையததில் கிடைககும். 20% கழிவு உண்டு.

வாழ்க்கைப் போராட்டம்

திருமதி. அனந்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள் B. SC.,
முதுகலை வகுப்பு (தமிழ்), இரண்டாம் ஆண்டு,
இராணிமேரி கல்லூரி.

"எழுதிச் செல்லும் விதியின்கை
எழுதி எழுதி மேறசெல்லும்;
தொழுது போற்றி நின்றாலும்,
சூழ்ச்சி பலவும் செய்தாலும்,
அழுது கண்ணீர் விட்டாலும்,
அபயம் அபயம் என்றாலும்,
வழுவிப் பின்னால் ஏகியொரு
வார்த்தை மாற்றம் செய்திடுமோ?"— உமர்க்கயாம்.

மனிதன் இவ்வுலகையும், இவ்வுலகில் வாழும் பொருள்களையும் தன்னடிக் கீழ் கொண்டு விட்டதாக மகிழ்கிறான். மண்ணில் நடமாடி சாடுபவன், விண்ணிலும் சாடத் தொடங்கி விட்டான். அணுவைப் பிளக்கிறான். கண்டறியாத இடங்களும், கேட்டறியாதவைகளையும் கண்டறிந்து மகிழ்கிறான். ஆனால் எல்லாவற்றையும் தன் கைக்குள் அடக்கிவிட்டதாக எண்ணி வாழ்பவனின் வாழ்க்கையையே அவன் எண்ணங்களையே அடக்கியாளும் உயர்ந்த சக்தி, ஆற்றாத சக்தி ஒன்று இருப்பதையே மறந்து விட்டான். அவன் செயல்கள் யாவும் எண்ணங்களுக்கு கட்டுப்பட்டு இருக்குமாயின், அந்த எண்ணங்களைக் கட்டுப்படுத்தி ஓட்டும் திறம் அந்த உயர்சக்திக்கு உண்டு. அந்த வலியின் கைப் பொம்மையாகத் தான் மனிதன் வாழ்கிறான். இந்த உண்மையை நம் தமிழர் மிகப் பழங்காலத்திலேயே நன்கு உணர்ந்திருந்தனர். இப்பெரு வலியை நம் தமிழர் "ஊழ்" எனவும் "விதி" எனவும் கூறுவர். இந்த ஊழுக்கும் மனிதனுக்கும் அவன் வாழ்க்கை முழுவதுமே போராட்டம்

நடக்கிறது. மனிதனின் எண்ணங்கள் அவன் ஆசைகள் விருப்பங்கள் யாவும் விதிக்கு–விதியென்னும், காட்டாற்றில் எதிர் நீச்சல் போடவிரும்புகின்றன. ஆனல் விதியே வெல்லு கிறது. விதியை வெல்பவன் ஆயிரததில் ஒருவனுகவே இருப் பான். அவனை ஞானி என்பார்; அவன் சாவை வென்றவன், துன்பத்தை வென்றவன். இறைவனின் ஒருகூருன அவன், இறைவனுக மாறிவிடுகிருன். ஆனல் விதியை வெல்லுதல் என் பது யார்க்கும் எளிதல்ல. அலைகளற்ற கடலையும், காற்றில்லாத காடும் காண இயலாதது போல, சலனமற்ற, போராட்டமற்ற வாழ்க்கையும் காண இயலாது நாம் போராட்டத்தில் தோற்கும் போது அவ்விதியின் படியே நடந்து செல்கின்ருேம். இதனை தான் கணியன் பூங்குன்றன் கூறுகிருர் ''நீர்வழிப்படும்புணை போல'' தாம் அல்லல் உறுவதாக. வள்ளுவரும் விதியின் பெரு வலியைப் பற்றிக் கூறும் போது அதனை வெல்லுவார் திறனைப் பற்றியும் கூறுகிருர். அவர், ''ஊழையும் உப்பக்கம் காண்பர் தாழாது உஞற்றுபவர்'' என்று கூறி வலியை வெல்வாரின் பெருவலியைப் போற்றுகிருர்.

இத்தகைய நல்லறிவு படைத்த உயர்குடியில் பிறந்த இளங்கோவும், இப்போராட்டத்தைப் பற்றிக் கூற மறந்தா ரில்லை. இவ்வாழ்க்கைப் போராட்டத்தைக் காட்ட ஒரு காவி யத்தை–தமிழன் மனதில் வாழும் உயர்கோவிலைக் கட்டிவிட் டார். இதுதான் சிலப்பதிகாரம் என்னும் அருங் காப்பியம். கண்ணகி என்னும் காப்பியத் தலைவியைப் படைத்து, அவள் வாழ்க்கை முழுவதுமே ஊழ் என்னும் வலியைப் போராடச் செய்து, முடிவில், ஊழ் தன் கடமையை முடித்துக் கொண்டு, தன்னுடன் எதிர்நின்று போராடிய கண்ணகிக்கு பெரும் புகழ் அளித்து, இப்போராட்டத்திற்கு கோவலன், பாண்டியன், மதுரை மாநகர் இவற்றையெல்லாம் பணயமாக்கிச் சித்தரித்து இருக்கிருர்.

இன்ப வாழ்க்கையில்-துன்பம் என்பதே இன்னது என்பதறி யாத மக்கள் வாழ்க்கையில் ஊழ்வினைக் குறுக்கிட்டது. கண்ணகி கோவலன் என்னும் இக்காதலரைப் பிரித்து மாதவி என்னும் கணிகைபால் சேர்த்தது. மற்ற கணிகையராக இருந்

தால் கோவலன் தன் உயர்குடித் தன்மைக்குப் புறம்பான வாழ்க்கையைக் கண்டு வெறுத்து முதலிலேயே திரும்பியிருப் பான். அப்படியில்லாது, அவனைக் கொண்டு சேர்த்ததும், பிறப் பிலே தாழ்ந்து இருந்தாலும் குணத்திலே சிறந்த ஒருத்தியிடந் தான். இப்படிப்பட்ட நிலையில்தான் கோவலனைத் தான் விரும் பும் நாட்கள் வரையில் மாதவியிடம் தங்கச் செய்யமுடியும் என்று வலி எண்ணியது போலும்! கண்ணகி பிரிவால் வருந் தினாள் ஆனால் முழுவதும் உடைந்து விடவில்லை. தன் கடன் களையும் குல ஒழுக்கததையும் சரிவர நடத்தி வந்தாள். இதனைத் தான் கொலைக்களக் காதையில்

"அறவோர்க் களித்தலும் அந்தணரோம்பலும்,

....

மாற்று உள்ளம் வாழ்க்கையேனுதலின்"

என்று கூறுவதன் மூலம் அறிகிறோம். கண்ணகி காலக்கழி வால் ஆறுதல் அடைந்தாள். இப்படிப்பட்ட திண்மை உடை யாள் எதிரில் நிற்கும் ஊழின் வலி என்னுயிற்று? முதல்படி ஊழைப் பொறுத்தவரையில் படுதோல்வி. ஊழும் தன்னைவிட திறன்மிக்கவளிடம் போரிடுவதைக் கண்டுகொண்டது. அது இன்னும் வலியுடன் போரிடத் துணிந்தது.

காதலன் திரும்பி வரவே மாட்டான் என்ற நம்பிக்கையில் அதன் காரணமாக எழுந்த துணிவில் - அதன் உடனடியாக எழுந்த ஆறுதலில் தனிவாழ்கையையே மேற்கொண்டாள். இத்தகையவளிடம் அவள் முயற்சி சிறிதும் இன்றியே கோவலன் திரும்பிவிட்டான். ஆனால் அவள் அவனைக்கண்டு பூரிக்கவில்லை. தேவந்தி இவளிடம் இம்மை மட்டுமின்றி மறுமையிலும் கண வனைக் கூடியிருக்கும் வழியைக் கூறியபோது கண்ணகி அதைப் பின்பற்ற மறுத்தாள். இப்பொழுதும் கோவலன் வந்தவுடன் தன்னிடமே இருக்கவேண்டும் என்று தூண்டாமல் சிலம்பைக் கொடுத்து மாதவியிடம் அனுப்பி விடப்பார்க்கிருள். இது இவளு டைய மனப்பக்குவத்தை எடுத்துக்காட்டும். இத்தகைய நெஞ் சுரம் கொண்டவளை ஊழ்தான் என்ன செய்துவிடக்கூடும். இவ்வெண்ணமே மேலே செல்லும் கதைப் பகுதியைக் கவனிக் கத்தூண்டும்,

கோவலன் திரும்பியது ஊழின் சூழ்ச்சியே யன்றி கண்ணகி யின் எதிர்பாராத வெற்றியன்று. இது, ஊழிற்கும் கண்ணகிக் கும் நடக்கும் போராட்டத்தில், ஊழ்வினை விரும்பிப் புகுத்திய, புதிய மாறுதல். கோவலனைப் பிரித்து வைப்பதில் பயனில்லை என்பதுணர்ந்த ஊழ், யாழின் மூலம் மாதவியிடம் இருந்து பிரித்து. திரும்பவும் கண்ணகி பால் சேர்த்துவைத்தது. இச் செயல்கள் யாவும் ஊழின் செயல் என்பதை இளங்கோவடிகள் காட்டுகிறார். மாதவியை விட்டு கோவலன் பிரிந்தது ஊழின் வலியே என்று கூறுகிறார். இரண்டாவது கோவலன் வரவு எவ்வளவு பெரிய தீமை அளிக்கப்போகிறது என்பதைக் கனாத் திறம் உரைத்த காதையில் காட்டுகிறார். இதுமட்டுமல்லாது, கோவலன் கண்ணகி ஆகிய இருவரும் மதுரைக்குச் செல்வது ஊழ்வினையின் செயலே என்பதை நாடுகாண் காதையில், "ஊழ்வினை கடைஇய உள்ளத்துரப்ப" [4] என்று மூன்று முறை காட்டியுள்ளார்.

எதிர்பாராத அதிர்ச்சியால் அறிவு மயங்கி விடுதல் இயல்பு. கோவலன் வருகையை விட, அவனுடைய மனமாற்றம் அவளுக்குப் பேரதிர்ச்சி தந்தது. அவனுக்குச் சிலம்பை அளித்து மாதவியிடம் அனுப்பப் பார்த்தவளுக்கு, நிச்சயமாகத் தன் கனவு பலிக்கும் என்ற உறுதிகொண்டிருந்தவளுக்கு, மதுரைக் குச் செல்லாமல் அவனைத் தடுக்க முடியாமல் இருந்ததன் காரணம் என்ன? ஊழின் செயலா? அவளுக்கு மனதில் ஏற்பட்ட பேரதிர்ச்சியா? எதிர்பாராத விதத்தில் கோவலன் குணத்தில் ஏற்பட்ட மாறுதல், அவளைக் கனவை மறந்துவிடச் செய்தது.

அவள் மனஉறுதியைக் கண்டு நிலை குலைந்த ஊழ், இனி அவள் யாரைத் தன் தெய்வமாகக் கொண்டிருந்தாளோ அவனைத் துணையாகக் கொண்டே, அவளை வெல்ல முயன்றது. இதன் பயன், அவள் விரும்பும் கோவலனே அவளுக்குப் பகையானான். அவனைத் தன் கருவியாகக் கொண்ட ஊழ், தன் விருப்பப்படியே இருவரையும் கூட்டிவைத்து நிலைகுலையச் செய்தது. கண்ணகி யின் மனவலியை, குலைந்த மனவுறுதி யுடைய கண்ணகியை அதிக நாள் காலந் தாழ்த்த விரும்பவில்லை. வேனிற் காலத்தில், அவர்களை வீட்டை விட்டுத் துரத்தியது. காட்டு வழியில்,

நடத்தி சென்றது. அவர்களைச் சேர்த்து வைத்தும் இன்பம் அடையாமல் செய்துவிட்டதே. இத்தகையத் துன்ப நிலையைக் கண்டு மண்மகளும் இயற்கையும் ஆகாயமும் கதறி அழுதன. இத்துடன் ஊழ் தன்செயலை நிறுத்தி யிருந்தால் நாம் மகிழ்ந் திருப்போம். ஆனால், மதுரையை அடைந்த மறுதினமே, கோவலனைக் கொலை செய்தது.

அவர்கள் மதுரையை அடைந்தது, ஊழின் விளைவு என் பதை மாடலன் மூலம் நன்கறிந்தான். கோவலனும் கொலைக் களக் காதையில் அங்கனமே கூறுகிறான். தான் உணர்ந்திருந்த இந்த உண்மையை அவள் வழக்கில் கூறுகிறாள். ஆனால் கோவலன் கொலையுண்டது ஊழின் ஒரு செயலே என்பதை உணரவில்லை. ஆனால் மன்னவனே பொருப்பாளி என்று எண்ணி மன்னனையும் அழித்தாள் மதுரையையும் எரித்தாள்.

மன்னன் மாண்டான்: மதுரையும் எரிந்தது. பகையின் அழிவால் மகிழ்ச்சியோ, மனஅமைதியோ பெறவில்லை. ஏனெனில், அவள் பகைவன் அழிந்திருந்தால் அல்லவோ மன அமைதி பெறமுடியும்?

" காதலர்க் கெடுத்த நோயோடு......
மயங்கலும் மயங்கும் "

பகைவன் வாழத் தன்துணை இழந்து பரிதவித்து நின்றாள் கண்ணகி. அதனை வெல்ல தெய்வத்தின் துணை ஒன்றே உதவும் என்பது உணர்ந்தாள். இதன் பலனாக, ஊழினைப்பற்றி மதுராபதி தெய்வத்திடம் நன்கு அறிந்தாள். தன்னைவிட வல்லவனை வெல்ல முயன்றதால் அவன்பால் வெற்றி சேர்ந்தாலும், இவள் அடியைப் புகழும் பீடும் வந்தடைந்தன, பிறப்பற்ற பேரின்ப வீட்டை அடைந்தாள். இவள், மக்களாலும் தெய்வமாகப் போற்றப் பட்டாள். தெய்வங்கள் இவளைத் தங்களுள் ஒருத்தியாகக் கொண்டன. ஆனால் இப்பெரும் பேற்றிற்குப் பணயமாகத் தன் கணவனையும், உடலையும், மதுரைமாநகரையுமே இழக்க நேர்ந்தது. ஊழின் வெற்றியை "என்றோ அறிந்த உண்மை" என்று அமைதி அடைந்தாலும், நம் உள்ளம் அதனை எதிர்த்த வளின் பெருமையை எண்ணி விம்மிதம் அடைகிறது.

சுந்தர மூர்த்தி சுவாமிகளின்
அற்புதத் திருப்பதிகங்கள்
Hymns of St. Sundarar

திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
காசி இந்துப்பல்கலைக்கழகம், காசி.

St. Sundaramurti sent a messenger to Paravaiyar to inform her of his arrival. Paravaiyar was already aware of the episode that took place at Tiruvorriyur and so did not allow the messenger to enter her house. And the saint had none but one recourse. As usual he made an appeal to Paramasiva to undertake this mission. Pasupati in the disguise of a priest met Paravaiyar and pleaded for Sundaramurti. But she was adamant. Once again He appeared before her in His true form. She prostrated at His Feet and begged His pardon and agreed to receive St. Sundarar. Thus through Siva's mediation. St. Sundaramurti and Paravaiyar were re-united.

There was, at that time, another Siva Bhakta known as Eyarkon Kalikkamar. He came to know of the reunion of St. Sundarar and Paravaiyar and the part played by Siva Himself in this. His regard for and devotion to Lord Siva was so much that he could not approve of St. Sundarar's action, i.e, making the Great Siva play the role of a mediator in the saint's love-quarrels. His contention was that Sundarar should not have allowed God to do so even though God was always prepared to do any thing for the sake of His devotees. Kalikkamar swore not to see St, Sundarar,

Lord Siva wanted to remove this misunderstanding and unite these two contemporary saints. So He caused Kalikkamar be afflicted by colic pain, and also infor-med him that the pain could be removed only by Sundaramurti. And St. Sundarar was also ordered to meet Kalikkamar and cure him. Accordingly St. Sundaramurti hastened to visit Kalikkamar. The latter heard of the former's coming, and, as he did not want to meet the one, who made his Lord serve as his messenger, disembowelled himself and died. His wife did not want to reveal this and extended a warm Welcome to St. Sundarar, When he asked her to take him to Kalikkamar, she said there was nothing wrong and that her husband was sleeping well. But Sundaramurti insisted on being taken to the ailing saint; As soon as he entered the room he saw Kalikkamar lying in a pool of blood with the bowels hanging out. He also tried to kill himself with a dagger. By the Grace of God, Kalikkamar stood up and prevented him from doing so. Kalikkamar understood the greatness of St. Sundarar and they both became good friends thereafter.

Another contemporary of St. Sundarar was the king of the chera Country (modern Kerala). He was called Kazharrirrarivar. (He is known as Cheraman Perumal also). He came to know of St. Sundarar through Parameswara and set out to meet Sundaramurti Nayanar. At Tiruvarur the two great Saints met and became friends. Together they visited many Siva shrines in Cholanadu and Pandiya Nadu and returned to Tiruvarur.

Cheraman Perumal requested St. Sundarar to go with him to his capital and they both set out. They

visited the shrines on the southern bank of the Kaveri and reached Tirukkandiyur. Then they wanted to worship the Lord enshrined at Tiruvaiyaru situated on the other bank of the river. Then the river was in floods. St. Sundarar appealed to Siva and the river parted and let the saints cross to the other bank.

At Kodungolur, the chera Capital, people gave these two saints a royal welcome St. Sundarar stayed in the royal palace for some days. Then he remembered his Lord at Tiruvarur and longed to worship Him. So he took leave of Cheraman Perumal and set out. The king presented him with gold and precious stones.

St. Sundarar on his way to Tiruvarur crossed many forests, rivers and mountains and neared Tirumuruganpoondi. Perhaps Lord Pasupathi thought that Sundaramurti should not receive anything from any one but Him. So He caused His men loot Sundaramurti. The saint went to the temple at Tirumuruganpoondi and narrated his encounter with the robbers. Miraculously all the stolen riches appeared at the gate of the temple and the saint went home with them.

திருமுருகன்பூண்டி: பண: பழம்பஞ்சுரம்

"கொடுகுவெஞ்சிலை வடுகவேடுவர் விரவ லாமைசொல்லித்
திடுகுமொட்டெனக் குத்திக் கூறைகொண் டாறலைக்குமிடம்
முடுகுநாறிய வடுகர்வாழ்முரு கன்பூண்டி மாநகர்வாய்
இடுகுநுண்ணிடை மங்கைதன்னொடும் எத்துக்கிங்கிருந்
தீரெம்பிரானீரே!"

"This place is full of robbers They carry bows always; they curse and rob the wayfarers. Oh, my Lord of Tirumuruganpoondi, Why do you, with Parvati, stay here, where only robbers live".

(To be continued)

கச்சிப் பெரும்பதி

திரு. கி. வா. ஜகன்னாதன் அவர்கள்

தமிழ் நாட்டில் ஐந்து மண்டலங்கள் சிறப்புற்று விளங்கின. அவை சோழ மண்டலம், பாண்டிய மண்டலம், சேர மண்டலம், கொங்கு மண்டலம், தொண்டை மண்டலம் என்பன. இவற்றில் தொண்டைமண்டலம் அல்லது தொண்டை நாட்டின் தலைநகரம் காஞ்சிபுரம். முக்தி நகரங்கள் ஏழில் ஒன்றாக வைத்துப் பாரதநாடு முழுவதும் மதிக்கப்பெறும் நகரம் இது. 'கஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, காசி விசாலாட்சி' என்று வழங்கும் பழமொழியில் முதலிடம் பெறுவது. ஐந்து மண்டலங்களில் மற்ற மண்டலங்களின் தலைநகரங்கள் சிற்றூராக இருக்கின்றன. ஆனால் காஞ்சியும் மதுரையும் இன்னும் பழமைச் சிறப்பு மாறாமல் புதிய பொலிவும் பெற்று விளங்குகின்றன. இதற்குக் காரணம் காமாட்சியின் அருளும், மீனாட்சியின் அருளுமேயாகும்.

வடக்கே ஒரு நாலந்தா இருந்த மாதிரி தெற்கே ஒரு காஞ்சிமாநகரம் பல கலை வல்லுநர்களும் இருந்து கல்வியை வளர்க்கும் இடமாக இருந்தது. வடமொழியும் தென்மொழியும் இணைந்து வளர்ந்த இடம் இது. வைஷ்ணவமும் சைவமும் நிலை நிற்கும் திருத்தலம் இது. பௌத்தமும் சைனமும் இடம் பெற்ற பதி இது. காஞ்சிக்கடிகை என்பது மிகவும் புகழ் பெற்ற கலைக் கூடமாக நிலவியது.

வடமொழி நூல்களிலும் தமிழ் நூல்களிலும் மிகப் பழங் காலந் தொட்டு இதன் பெருமை பேசப்படுகின்றது. இங்கே இருந்து அரசாண்ட தொண்டைமான் இளந்திரையனைப் பற்றிய புகழ் பெரும்பாணாற்றுப் படை என்ற நூலில் வருகிறது. மணி

மேறகணட கட்டுரை காஞசிபுரம ஸ்ரீ சோமசுநதர கன்யா வித்தியாலயம டயமணடு ஜுப்லி சாவனர் கமிட்டியின அனுமதியின் பேரில் பிரசுரிககப்படுகிறது.

மேகலையில், மணிமேகலை இந்நகரத்துக்கு வந்து தங்கிய செய்தி வருகிறது அக்காலத்துக்குப் பின் ஆழ்வார்களும் நாயன்மார்களும் வந்து ஆலயங்களை வழிபட்டு அழகிய திருப் பாடல்களைப் பாடியிருக்கிறார்கள். புராணங்களும் பிரபந்தங் களும், தனிப்பாடல்களும் இந்த நகரத்தைப்பற்றிக் கூறும் செய்திகள் கடல் போலப் பரந்திருக்கின்றன.

"நகரேஷு காஞ்சி" என்று வடமொழியில் ஒரு வசனம் உண்டு. நகரங்களிலே சிறந்தது இது, இறைவன் திருக் கோயிலை நடுவே உடையதாய்த் தெருக்களெல்லாம் இதழ் அடுக்குகளாக அமையத் தாமரைப் பூவைப் போல விளங்கிய தாம். இதைப் பெரும்பாணாற்றுப்படை சொல்கிறது.

வறியவனும் இசைப் புலவனுமாகிய பாணன் ஒருவனுக்கு வேறு ஒரு பாணன், கச்சிப்பதியில் உள்ள தொண்டைமான் இளந்திரையனிடம் சென்றால் பரிசுகள் பல பெற்று வள வாழ்வை அடையலாம் என்று அறிவுறுத்தி, அங்கே போவ தற்கு வழிகூறுகிறான். பெரும்பாணாற்றுப் படையின் உட் கருத்து அதுதான். இதோ காஞ்சீபுரத்தைப்பற்றிச் சொல்கிறான்:

"அங்கங்கே உள்ள கடவுளை வாழ்த்தி உங்கள் வாத்தி யத்தை வாசித்துக்கொண்டு போங்கள். கச்சிப்பதியை அணுகு வீர்கள். அதைச் சுற்றிச் சோலைகள் இருக்கும் அங்கே யானை களைக் கட்டியிருப்பார்கள். யானைக்கு மாவுத்தர் கவளம் கொடுப் பார்கள், நெய்யும் சோறும் கலந்த கவளம் அது. மாவுத்தர் பராக்காக இருக்கும் சமயம் பார்த்து அங்கே உள்ள கருவுற்ற குரங்குகள் அந்தக் கவளத்தைப் பறித்துக்கொள்ளும். ஊருக் குள்ளே தேர்கள் போன சுவடுகள் இருக்கும். பெரிய வீரர்கள் திரண்டிருக்கும் ஊர் அது. எந்தக் காலத்திலும் படைக்குப் பஞ்சம் இல்லை. தலைமுறை தலைமுறையாக அங்கே வாழ்ந்து வரும் குடும்பங்கள் பல உண்டு. கடைவீதிகளில் பண்டங்களை விற்பாரும் வாங்குவாருமாக இருப்பார்கள். அங்கே போய் விட்டால் திரும்பி வர மனம் வராது.

"ஊரைச் சுற்றி மதில் இருக்கிறது. நீல மேனியையுடைய திருமாலின் உந்தியிலே பூத்ததும் பரமனைப் பெற்றதுமாகிய

தாமரை போன்ற தோற்றம் உள்ளது அந்த நகரம். அடுக்கடுக்காக இதழ் வரிசைகளைப் போல வீதிகள் இருக்கும், செங்கல்லாலான மாளிகை பல உண்டு. ஆல், அரசு, பலா முதலிய மரங்கள் பூவாமலே காய்க்கும். அந்த மரங்களில் பறவைகள் கூட்டம் கூட்டமாக வந்து தங்கும். அவற்றிற்குள்ளே பலா மரம் சிறந்தது. அதுபோல உலகத்திலுள்ள நகரங்களில் பல நாட்டு மக்களும் வந்து மொய்க்கும் இடங்கள் பல. அவற்றுக்குள்ளே கச்சிமாநகரம் சிறந்தது. அங்கே எப்போதும் விழாவாக இருக்கும். மிகப் பழங்காலந்தொட்டு இப்படி விழாக்களைக் கொண்டாடும் 'பழவிறல் மூதூர்' அது. அங்கே இருக்கிறான் தொண்டைமான் இளந்திரையன்.''

இவ்வாறு அந்தப் பாணன் வருணிக்கிறான். இடையே திருவெஃகணையில் எழுந்தருளியிருக்கும் திருமாலைப் பற்றியும் சொல்கிறான். அவருக்குச சொனனவண்ணம் செய்த பெருமாள் என்றும் யதோக்தகாரி என்றும் திருநாமங்கள் இக்காலத்தில் வழங்கும். 'காந்தள் நிறைநத மலைச்சாரலில் யானை படுததிருப்பது போல பாம்பணையிலே எழுந்தருளியிருக்கும் பெருமான்' என்று சொல்கிறான்.

''காந்தளஞ் சிலம்பிற களிறுபடிந் தாங்கும்
பாம்பணைப் பளளி அமர்ந்தோன்.''

மணிமேகலை என்னும் தமிழ்க் காப்பியத்தில், மணிமேகலை காஞ்சீபுரம் சென்று அங்கே இருந்த உணவுப் பஞ்சத்தைப் போக்கினாள் என்ற வரலாறு வருகிறது. அந்த நூலின் 28-ஆவது அத்தியாயம், 'கசசிமா நகர் புக்க காதை' என்ற பெயரை உடையது. வஞ்சிமாநகரிலிருந்து மணிமேகலை கச்சிமா நகர் சென்று அறவணவடிகள் என்னும் பௌத்த முனிவரிடம் உபதேசம் பெற்று அங்கேயே தங்கித் தவஞ் செய்தாள் என்று மணிமேகலையின் கதை முடிகிறது.

மணிமேகலை வஞ்சியிலிருந்து வானத்தின் வழியே கச்சிமா நகர் வந்தாள். தேவராஜனாகிய இந்திரன் வாழும் அமராவதிப் பட்டணம் உலகத்துக்கு வந்தாற் போன்ற பல வளங்களையும்

உடைய நகரம் அது. அது இப்போது பஞ்சத்தால் பொலி விழந்து கிடந்தது.

"தேவர் கோமான் காவல் மாநகர்
மண்மிசைக் கிடந்தென் வளந்தலை மயங்கிய
பொன்னகர் வறிதாப் புல்லென் றுயது."

அதைக் கண்டு மனம் கலங்கிய மணிமேகலை அந்த மூதூரின் மதிலை வலமாக வந்து கீழே இறங்கினாள். அங்கே ஆண்டிருந்த இளங்கிள்ளி என்னும் அரசன் புத்தருக்குரிய ஆலயமாகிய சேதியத்தைக் கட்டியிருந்தான். அதைத் தொழுதுவிட்டுத் தென்மேற்குத் திசையில் சென்றாள், அவள் வந்திருக்கிறதைச் சட்டையை அணிந்த அதிகாரி அறிந்து அரசனிடம் சென்று சொன்னான். மணிமேகலை தங்கியிருந்த இடத்துக்குத் தருமதவனம் என்று பெயர். எடுக்க எடுக்க குறையாத சோற்றை அளிக்கும் அமுதசுரபி என்னும் பாத்திரம் அவள் கையில் இருந்தது இடங்களில் பசிப்பிணியினால் துன் புற்ற மக்களுக்கு அந்தப் பாத்திரத்திலிருந்து உணவு எடுத்து வழங்கி வருகிறாள் என்ற செய்தி நாடு முழுவதும் பரவி யிருந்தது.

இளங்கிள்ளி, ஒரு தெய்வத்தின் மூலமாக மணிமேகலை அங்கே வந்து அமுதசுரபியைக் கொண்டு உணவுப்பஞ்சத்தைப் போக்குவாள் என்று அறிந்திருந்தான். அந்தத் தெய்வத்தின் கட்டளைப்படியே ஓரிடத்தில் ஒரு பொய்கையையும் அதைச் சுற்றிப் பூம்பொழிலையும் அமைத்தான், மணிபல்லவம் என்ற தீவில் உள்ள கோமுகி என்னும் பொய்கையிலிருந்து தான் மணிமேகலைக்கு அமுதசுரபி என்ற அட்சயபாத்திரம் கிடைத் தது. கச்சிமாநகரில் அந்த இரண்டையும் போலப் பொழிலும் பொய்கையும் இருக்க வேண்டுமென்று அந்தத் தெய்வம் கூறியது

இளங்கிள்ளி, மணிமேகலையை அடைந்து வணங்கி அந்தப் பொழிலுக்கு அழைத்துச் சென்று காட்டினான். அங்கே அவள் அரசனைக் கொண்டு புத்த பகவானது திருவடியமைந்த பீடத்

தையும், தீவதிலகை, மணிமேகலா தெய்வம் என்னும் இரண்டு தெய்வங்களுக்குரிய கோயிலையும் அமைக்கச் செய்தாள். அந்தப் பீடத்தில் தன் கையிலிருந்த அமுதசுரபியை வைத்துத் தொழுது எடுத்து, "எல்லா உயிரும் வருக!" என்று அறிவித்தாள். அதைக் கேட்டுப் பசிப்பிணியால் வாடிய மக்கள் கூட்டம் கூட்டமாக வந்தார்கள். பதினெட்டு மொழிகளை பேசுபவர்கள் அந்தக் கூட்டத்தில் இருந்தார்கள். கண் இழந்த குருடர் வந்தனர்; செவிடர்கள் வந்தனர்; கால் முடமானவர்கள் வந்தார்கள்; பாதுகாப்பு இல்லாத மக்களும் ஊமைகளும் வந்தனர். சிறைப்பட்டு வருந்தியவர்கள், விரதமிருக்கும் தவத்தினர், பசிமிக்கவர்கள், ஏழைகள் யாவரும் வந்தனர். லட்சக்கணக்கான விலங்குகள் வந்து ஆருயிர் மருந்தாகிய உணவைப் பெற்று உண்டன.

இவ்வாறு அங்குள்ள பஞ்சத்தைப் போக்கினுள் மணிமேகலை. பிறகு மழையும் பெய்தது. அறவணவடிகளைத் தரிசித்து அவரிடம் உபதேசம் பெற்று அந்த மாநகரிலேயே தவஞ் செய்யலானுள்.

பௌத்தர்களின் ஆசார்யராகிய அறவணவடிகள் காஞ்சியில் இருந்ததாக இந்தக் கதை சொல்கிறது. திந்நாகர் என்ற சிறந்த பௌத்தப் புலவர் காஞ்சியிலிருந்து வடநாடு சென்று புகழ்பெற்றுர்.

இப்படியே ஜைனர்களும் இந்த நகரில் சிறப்புற்று வாழ்ந்தார்கள். இப்போதும் ஜினகாஞ்சி என்னும் திருப்பருதிக்குன்றத்தை இங்கே காணலாம்.

இன்று சின்னக் காஞ்சீபுரம் என்று வழங்கும் விஷ்ணு காஞ்சி திருமாலடியார்களுக்குச் சிறந்த இடம். முன்னே சொன்ன திருவெஃகணை முதலிய பல திருமால் திருப்பதிகள் இங்கே இருக்கின்றன. ஒரு பாட்டு இத்திருப்பதியிலுள்ள சில திவ்ய தேசங்களைச் சேர்த்துச் சொல்கிறது.

"ஆடவர்கள் எவ்வா றகல்வர்அணி வெஃகாவும்
பாடகமும நீரகமும் பஞ்சரபா — நீடியமால்

நின்ருன் இருந்தான் கிடந்தான் இதுவன்ரு
மன்ருர் கலிக்கச்சி மாண்பு.''

திருமழிசையாழ்வார் சொன்னதற்காக அவருடன் சென்ற வர் திருவெஃகாவிலுள்ள பெருமாள். பிறகு அவர் கூற, மீண்டும் பழையபடியே வந்து பள்ளி கொண்டாராம். அதனுல் அவருக்கும் சொன்ன வண்ணம் செய்த பெருமாள் என்ற திரு நாமம் உண்டாயிற்று.

பெரிய காஞ்சீபுரந்தான் சிவகாஞ்சி. இங்கே காமாட்சியின் திருக்கோயில் நடுநாயகமாக இருக்கிறது. அந்தக் கோயிலில் சாஸ்தாவின் சந்நிதி ஒன்று உண்டு. கரிகாலன் வடநாட்டுக் குச் சென்றபோது இங்கே வந்து செண்டாயுதம் ஒன்றை இந் தச் சாஸ்தாவுக்குச் சாத்தி எடுத்துச் சென்ருனும். அதைக் கொண்டு இமயமலையை அடித்துத் தன் புலிப்பொறியைப் பொறித்து வந்தானும். செண்டு என்பது குதிரைச் சவுக்குப் போல உள்ள படைக்கலம். கரிகாலன் செண்டாயுதம் பெற்றுச் சென்றதை ஒரு பழம் பாடல் சொல்கிறது.

''கச்சி வளைக்கைச்சி காமக்கோட்டம் காவல்
மெச்சி இனிதிருக்கும் மெய்ச்சாத்தன் – கைச்செண்டு
கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான்
செம்பொற் இரிதிரித்த செண்டு.''

ஏகாம்பரேசர் திருக்கோயில் பெரிதும் புகழ் பெற்றது. திருவேகம்பம் என்று தமிழ்ச் செய்யுட்களில் அதன் பெயர் வழங்கும். மாவின் கீழ் எழுந்தருளிய எம்பெருமான் அம்பிகை யின் நகிற்சுவடும் வளைச்சுவடும் அணிந்தவர். நான்கு சைவ சமயாசாரியார்களும் அவரைப் பாடியிருக்கிருர்கள். வேறு பல சிவாலயங்களும இம்மாநகரில் உணடு. பல்லவர்கள் கட்டிய ஆலயங்களும் சோழர் முதலிய பெருமன்னர்கள் திருப்பணி செய்த திருககோயில்களும் பலப் பல.

ஆதிசங்கரர் தங்கித் தவம் புரிந்த இடம் இது. அவர் நிறுவிய காமகோடி பீடம் மிகச் சிறப்பாக இலங்கிவருவது உலகம் அறிந்த செய்தி.

பழங்காலத்தில் புலவர்கள் வைத்துக்கொண்ட பெயர்களில் ஏகாம்பரநாதர் பெயரும் காமாட்சியின் பெயரும் காணப்படுகின்றன. மாமூலனார் என்பவர் சங்ககாலப் புலவர்களில் ஒருவர். மாவின் அடியில் இருப்பதனால் கச்சி ஏகம்பருக்கு மாமூலர் என்ற பெயர் வந்தது. அந்தப் பெயரையே அப் புலவருக்கு அவருடைய தாய் தந்தையர் இட்டிருக்கின்றனர். காமக்கணி நப்பசலையார் எனபவர் ஒரு பழைய பெண் புலவர். காமக்கணி அல்லது காமக்கண்ணி என்பது காமாட்சி என்பதன் வேறு உருவமே.

இம்மாநகரின் பெருமையை விரித்து எழுதினால் அது பெரிய நூலே ஆகிவிடும்.

இந்த நகரின் சிறப்பைச் சொல்லும் ஒரு பாட்டைச் சொல்லி இதை முடிக்கிறேன். 'இந்த உலகம் முழுவதும் ஒரு பெரும் பண்ணை' தேசங்கள் யாவும் வயல்கள், அந்த வயல்களில் கரும்பு போன்றது தொண்டை நாடு, கரும்பின் சாறே அந் நாட்டிலுள்ள பெரிய ஊர்கள். கருப்பஞ் சாற்றைக் காய்ச்சிய வெல்லக்கட்டியே கச்சியை அடுத்த புறப்பகுதிகள், சிறந்த கற்கண்டுக் கட்டியே சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் கச்சித் திருப்பதி' என்பது அந்தப்பாடலின் பொருள்.

"வையகம் எல்லாம் கழனியா, வையகத்துச்
செய்யகமே நால்திசையில் தேயங்கள்; செய்யகத்து
வான்கரும்பே தொண்டை வளநாடு; வான்கரும்பின்
சாறேஅந் நாட்டுத் தலையூர்கள்; சாறட்ட
கட்டியே கச்சிப் புறம்எல்லாம்; கச்சியுள்
தான்ஏற்ற மான சருக்கரை மாமணியே
ஆன்ஏற்றான் கச்சி அகம்."

தாயுமானவரின் – பராபரக்கண்ணிகள்

Couplets in venerable adoration of the Omnipotent and Omnipresent

sung by

St. THAYUMANAVAR

25

The Jivan Mukthas or the matured souls are not identified themselves with any singular character of this earthly life. Like a water drop in a lotus leaf they are attached as well detached to this mortal world. This activities are beyond the level of ordinary human beings and they do not neither care for appreciation nor for criticism of other mortals They are balanced unbiased and unflattered. The behaviours of children, mad or frenzied men are often attributed to them at different times. But the truth is that they are ever consicious about their jiva and Siva. This is told in the undermentioned couplet.

பாலரொடு, பேயர், பித்தர் பான்மையென நிற்பதுவே
சீலமிகு ஞானியர்தம் செய்கை பராபரமே!

(பொ – ரை) யாதொன்றையும் வேறுபடுத்தியறிய முடியாத குழந்தை போலவும், பேயர் போலவும், பித்தர் போலவும், அவ்வத்தன்மையராகி நிற்றல் ஒழுக்கம் மிகுந்த ஞானியர்களின் செய்கை.

Oh....Lord Supreme! The sages who got realization act like children, who do not diferentiate men and matter, like frenzied who do not care for bodily-needs, and like mad who do not know friends and foes.

———

(தொடரும்)

Translated by Sri. K. PALANISAMY, M.A., Lecturer in Tamil, Sri. K G. S. Arts College, Arulnandi Nagar,

தேவிகாலோத்தரம் - சர்வஞானோத்தரம்

ஆசிரியர், திரு. மு. அருணாசலம் அவர்கள்,
திருச்சிற்றம்பலம்

வடமொழியில் தேவிகாலோத்தர ஆகமம், சர்வஞானோத்தர ஆகமம் என இரு சாத்திர நூல்கள் உள்ளன. அவை கி. பி. 1400-ஐ ஒட்டித் தமிழில் மொழி பெயர்க்கப்பெற்று, அக்காலத்தில் சிறந்த சைவ சாத்திரப் பிரமாண நூல்களாய் வழங்கினவென்று தெரிகிறது. இரண்டையும் ஒரே ஆசிரியர் செய்தார் என்பதும் விளங்குகிறது. ஆனால் ஆசிரியர் பெயரோ அவர் வரலாரோ எதுவும் புலப்படவில்லை.

தேவிகாலோத்தரம்

இந்நூல் தேவிகாதோத்தர ஆகமம் என்றும் பெயர் வழங்கும். ஸ்ரீகண்ட பரமேசுவரன் உமாதேவியாருக்கு இதை உபதேசித்தார் என்பது வரலாறு. பதமுத்தி, பரமுத்தி என்ற இரு வகை முத்திகளையும் மேலான பதவியும் மீண்டுவாரா நெறியும் ஆகிய பரமுத்தியைப் பெறுதற்குரிய தீவிரதரப் பக்குவ ஆன்மாக்களின் செயலையும் கூறுவது இவ்வாகமம். இது சிவாகமங்களின் சாரம் என்பர் பெரியோர்.

இந்நூற் பெயர், தேவி-காலம்-உத்தரம் என மூன்று சொற்களாய்ப் பிரியும். காலம் என்பது உயிர்களின், தீவிரதரப் பக்குவ காலத்தையும், உத்தரம் என்பது அக்காலத்தில் உபதேசிக்கத் தக்க சித்தாந்தத்தையும் குறிப்பன; உமாதேவியாருக்குச் சிவ பிரான் உபதேசித்த காரணம் பற்றித் தேவிகா லோத்தரம் எனப் பெயர் பெற்றது. உத்தரம் என்ற சொல் சித்தாந்தம் என்னும் பொருளது.

வடமொழித் தேவிகா லோத்தரம்[1] 85 சுலோகங்களும் விருத்தி யுரையும் உடையது. இது 1903-இல் யாழ்ப்பாணத்தில் அச்சிடப்பெற்றது. ஞானம், ஞானுசாரம் என இரு பகுதிகளை யுடையது. ஞான இயலில் ஞானத்தை அனுட்டித்தற்குரிய அதிகாரி இலக்கணம், அதிகாரியின் பெருமை, முத்திநெறி சீவன் முத்தி, சீவன் முத்தர் இயல்பு முதலியனவும், ஞானுசார இயலில் ஞானசாதகன் சிவஞானத்தைத் தவிர வேறு எதுவும் பயிலுதல் கூடாதென்பதும் கூறப்படுகின்றன.

தேவிகா லோத்தரம், சர்வ ஞானுேத்தரம் ஆகிய இரண்டு வடமொழி நூல்களும் சிவாக்கிர யோகிகள் பரம்பரையாகிய சூரியனுர்கோவில் ஆதீனத்தின் பிரமாண நூல்கள். தேவிகா லோத்தரத்துக்கு சிவாக்கிரயோகி தமிழ் உரை செய்தார். அது வெளியானதாகத் தெரியவில்லை; நூல் இருப்பதாகவும் தெரிய வில்லை. அவ்வுரையின் காலம் 16-ஆம் நூற்றுண்டு. அந்நூல் சைவ சித்தாந்திகளிடையே பயிலப்பெறவில்லை. பல காரணங் களுள் அது வேதாந்த பரமானது என்ற தவறுன கருத்தும் ஒன்று. இக்கருத்தை ஆதரிக்க அனேகத் தொடர்புகளும் ஏற் பட்டிருந்தன. ஒன்று, பின்வந்த சிவஞான வள்ளல் செய்த வேதாந்தபரமான வள்ளலார் சாத்திரத்தில் இதற்குத் தரப்பட்டுள்ள சிறப்பு. அந்நூலில் பதி பசு பாச விளக்கம் என்ற பகுதியுள், கொல்லா விரதம், என்ற தலைப்பில், இரண்டாம் பாடல் பின் வருவது :

அரிய ஆக்கையின் மானுடயாக்கையே யாக்கை
விரியு நோனபினில் உயிர்கொலா விரதமே விரதம்
கருதில் தெயீவதம் கண்ணுதல் தெய்வமே தெய்வம்
தெரியில் தேவிகாலோத்தரத் தேற்றமே தேற்றம்.

வள்ளலார் நூல் வேதாந்தம் ஆனபடியினுலே, அந்நூல் பாராட்டும் தேவிகா லோத்தரமும் வேதாந்த நூல் என்று சைவ

[1] *தேவிகாலோத்தரம், ஞானசார விசாரப் படலம என்ற நூல் வட மொழி மூலத்துக்குத தமிழில் ஒவ்வொரு வெண்பாவாக 85 பாடல் களுடன 1913-இலும் 1924-இலும் வெளியாயிற்று. பிந்திய பதிப்பில் இது ரமண மகரிஷி இயற்றியதாகக காணப்படுகிறது*

சித்தாந்திகளால் ஒதுக்கப் பெற்றது போலும்; இது சிறப்பான சைவ சித்தாந்த சாத்திரம் என்பதைச் சைவர்கள் மறந்து விட்டார்கள்.

இனி, வடமொழித் தேவிகாலோத்தரத்துக்கு மிகப் பழைய காலத்திலெயே ஒரு தமிழ் மொழி பெயர்ப்பு செய்யப் பெற்றிருந்தது. விநாயகர் வணக்கமாய்க் கூறப்பட்ட காப்புச் செய்யுளோடு இதன் 1848-ஆம் வருஷப் பதிப்பில் 73 விருத்தங்கள் காணப்படுகின்றன. இவற்றில் 13-ஆம் பாடல் "பொற்புறும் அதீதம்" என்ற சிவப்பிரகாச 50-ஆம் பாடல். பின் வந்த பதிப்புக்களில் இது நீக்கப்பெற்றுள்ளது; நீக்க நூல் 72 பாடல்.

முதல் மூன்று பாடல்கள் கடவுள் வணக்கம். முதல் பாடலில் மதுரைச் சித்தி விநாயகரையும், இரண்டாம் பாடலில், "அணி மதுரை யதனுள் எண்ணெண் திருவிளையாட்டுடைய பிரான் செங்கமலப் பொற்பாதம்" என்று சோமசுந்தரக் கடவுளையும், அடுத்த பாடலில் "பிணன் அணிவெள்ளி அம்பலத்துட் புரியா நின்ற ஆடல் கண்டு வந்த அங்கயற் கண்ணம்மை பதம்" என்று மீனுட்சியம்மையையும் வழிபடுவதால், இந்நூலாசிரியர் மதுரை நகரினர் என்று தெரிகிறது. இவரைப்பற்றி வேறு குறிப்புக்கள் தெரிந்ததில.

வானவர் தலைவா! இந்த மன்னுயிர்முத்தி யெய்த
ஞான ஆசாரஞானம் அருளினுல் அருளென்றேத்தி
மானமர் அயில்வேலீ ஒண்கண் மணமலி குமுதச்செவ்வாய்த்
தேனமர் குழலாள் தேவன் திருந்தடி பணிந்துசொன்னுள்

என்னும் முதற் செய்யுளாலும்,

உத்தம குணத்தாய், ஞானஒழுங்கெனும் இரண்டினுலே
மெய்த்தவர் முத்தியெய்தும் விதியினை வகுத்துரைப்பன்

என்னும் இரண்டாவது செய்யுளாலும், நூற்பெயர்க்குக் கூறப்பட்ட காரணம் பொருந்துவது விளங்குகின்றது. இங்குக் கூறும் ஞானம் ஒழுங்கு என்பன ஞான இயல், ஞானுசார இயல் என்ற இரு பகுதிகளைக் குறிப்பிடும். பக்தி ஞானம் முதலியன உடையோராகி, காலோத்தரத்தின் வழி ஒழுகுபவர் பெரியோ

ராவர் என்று 6-ஆம் பாடல் கூறுகிறது. ஞானம் வேண்டுபவர் இந்த நூலைப்பயில வேண்டும் என்று கூறுவது அக்காலத்து மரபு போலும். இவ்வாறு இந்த நூலின் வழி ஒழுக வேண்டும் என்று கூறும் பாடல்கள் "ஞான சாத்திர பஞ்சகம்" என்ற தொகுப்பினுள்ளும் காணப்படுகின்றன.

தேவிகாலோத்தரத்தில் எவ்விடத்தும் மெய்கண்ட சாத்திரக் கருத்துக்கள் விரவிக் கிடத்தல் இயல்பு. எடுத்துக் காட்டாக ஒன்றைக் கூறுவோம். சிவஞானிக்குப் பகிர் யாகப் பூசை வேண்டுவதன்று; ஒருகால் செய்ய விரும்பினால், புட்பவிதி நூல்களில் கூறியவாறு, உதிராத மலரைச் செடியிலிருந்தே எடுக்க வேண்டும் என்பதெல்லாம் அவசியமில்லை;

புறம் பேயும் அரன்கழல்கள் பூசிக்கவேண்டில்
பூ மரத்தின் கீழ்உதிர்ந்த போதுகளும்கொண்டு
சிறந்தாரும் சீர்ச்சிவனை ஞானத்தால் அங்குச்
சிந்திக்கும் படிஇங்குச் சிந்தித்துப் போற்றி ....

என்பது சித்தியார் பாடல் (302) இதை அப்படியே தேவிகாலோத்தரம் விரித்துக் கூறுகிறது;

நடுங்காமல் எவவுயிரும் நறுக்காமல் துரும்பனைத்தும்
பிடுங்காது முதலெவையும் பிரசமலர் கொய்யாது
விடுங்காலால் ஊழ்த்துதிர்ந்த விரைமலர் களவைஏந்தி
கருங்காலன் தனையட்ட அம்புயங்கள் அருச்சிப்பான்

இந்நூலின் செய்யுள் நடை சாமானிய நடை. இந்நூலின் உரையொன்று சென்ற நூற்றாண்டில் பல முறையும், பின் 1906-இலும், அச்சாகியிருந்தது. அவ்வுரை மாயாவாதம் என்ற காரணத்தால், சைவச் சித்தாந்தப் பேராசியராயிருந்த முத்தையா பிள்ளையவர்கள் தாம் சைவ சித்தாந்த பரமாகப் புதிய விருத்தி யுரை யொன்று சித்தாந்த ரத்னம் என்ற பெயரோடு (1935) எழுதி வெளியிட்டார்.

தமிழ் நூலின் பாடல்களை மதுரைச் சிவப்பிரகாசரும், திருப் போரூர் சிதம்பர சுவாமிகளும், எடுத்து மேற்கோள் காட்டு கிறார்கள். மூன்றிடங்களில் சிவப்பிரகாசர் இந்நூலைக் கூறு

கிருர். இரண்டு பாடல்கள் முன் கூறிய "பொற்புறும் ஆதீதம்" என்ற பாடலில் உரையில் வருகின்றன. இதனுல் ஒரு கருத்து தெளிவாகின்றது. இச் சிவப்பிரகாசர், சித்தாந்த மல்லாத எந்த நூலின் பெயரையும் உச்சரிக்கமாட்டார்; ஆகவே இந்நூலை இவர் சித்தாந்த நூல் எனவே கொண்டார் என்பது தெளிவு.

அச்சில்வாராத வேறுரையும் இதற்குண்டு.

மேற் கூறியவற்ருல் இந் நூல் சிவப்பிரகாசத்திற்குப் பின்னும், மதுரைச் சிவப்பிரகாசர் காலத்துப் பின்னும் தமிழில் மொழி பெயர்க்கப்பெற்றது என்று நாம் கருதலாம்; அதாவது கி பி. 1306–1488 ஆண்டுகளுக்கிடையில், சிவப்பிரகாசர் இதை எடுத்து மேற்கோள் காட்ட ஒரு நூற்ருண்டுகாலம் இடைவெளி விட்டோமானுல், இதன் காலம் 1375–1400 ஆகக் கொள்ளுதல் பொருந்தும்.

(அடுத்த இதழில் முடியும்)

திருமுறை நண்பர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

அகத்தியர் தேவாரத்திரட்டு

புதிய பதிப்பு

விசுவாவசு ஆண்டு ஆவணி மூல வெளியீடு

99+19=118 பக்கம் வெள்ளைததாள்

அகத்தியர் தேவாரததிரட்டின் வரலாறு, குறிபபுரைகள் ஆகியவை, அடங்கியது,

தனிப் பிரதி அடக்க விலை ரூ. 0-36.

ஒரே சமயத்தில் 20 பிரதிகளுக்குமேல் வாங்குவோருக்கு 20% கழிவு.
தபால் கட்டணம் வேறு.

கிடைக்குமிடங்கள்:—

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில்
ஸ்ரீவைகுண்டம். *(திருநெல்வேலி ஜில்லா)*

2. "தியாகராச விலாசம்"
பிள்ளையாா கோயில தெரு; திருவேட்டீசுவரன்பேட்டை,
திருவல்லிக்கேணி, சென்னை–5.

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பர இராமலிங்க சற்குரு புலம்பற்கண்ணி*

தொகுத்தவர், திரு. P. P. துரைசாமி அவர்கள்,
கோயமுத்தூர்.

[மலர் 16, இதழ் 9-ன் தொடர்ச்சி]

எதிலார் போன்றென்னை — யெண்ணும லிம்மையிலே
சூதிலா மெய்ந்நிலையிற் — றேயவருள் சற்குருவே. 261

எண்ணவரு மென்பிறவி — யெத்துணையு மென்பிழைக
ளெண்ணவரா தென்னினுமீ — டேற்றிவருள் சற்குருவே. 262

இப்படியி லென்னைமுன — மேன்றுகொண்டு மின்படையா
திப்படியே துன்புறுவே — னென்னுடைய சற்குருவே. 263

எந்தவினை செய்தாலு — மேதவத்தைப் பட்டாலுஞ்
சிந்தனை நின்பாலிருக்கச் — செய்தருவாய் சற்குருவே. 264

சீர்பரவுன் பாதநிழல் — சேரும்வரை யுன்றனடி
யார்பணியே செய்திடுமெய் — யன்பருள்வாய் சற்குருவே. 265

வாழ்கவிவ் வையகமும் — வானகமு மற்றவுமே
வாழ்க திருவருட்பா — வாய்மலர்ந்த சற்குருவே. 266

சற்குரு புலம்பற்கண்ணி முற்றுப்பெற்றது.

திருவருட் பிரகாச வள்ளலார் திருவடியே சரணம்.

*திரு. ச. மு. கந்தசாமி பிள்ளையவர்கள் இயற்றியது.

உ

சிவ சிவ

Aid to Sanskrit Studies at Sri Parvatha Vardhani Girls' High School, Rameswaram. Capital Rs. 18000

SANSKRIT is classified as one of the Indo-European Languages and it stands on a par with Latin, Greek, etc. It had been very popular throughout India till recent years and Billions of Hindus were conversant with this Language. This is considered also as the Language of the celestials in heaven and above all it is liked by Lord Siva. It was Lord Siva who taught Grammar to Panini. The Vedas and the six angas were said to have emerged from Lord Siva who, in addition, is always chanting the Vedas. Lord Siva is also called Sama-ganapriya. It is also said that Siva disclosed the Agamas through his five countenances and explained them with grace. Sanskrit has to its credit the eighteen Puranas, the Epics the five Kavyas and a host of other literary works and works on arts and Sciences. All copper plate grants of Pallava and Chola and Pandya monarchs were given in Sanskrit and many of the stone inscriptions were given in Sanskrit. Bharavi, Dandin and many scholars in Sanskrit were honoured in the Courts of Tamil kings. With a view to foster the growth of Sanskrit and to popularise and encourage the study of Sanskrit at Rameswaram, the All India Pilgrim Centre, this endowment is founded by His Holiness **Silasri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal**, Head of Sri Kasimutt,

Tirupanandal (South India) This endowment shall be styled as "**Endowment for giving aid to Sanskrit studies at Sri Parvatha Vardhani Girls' High School, Rameswaram**".

2. The capital of the endowment is Rs. 18,000 (Rs. eighteen thousand only) invested in 15 Years Fixed deposit in State Bank of India, Kumbakonam fetching interest at 7% per annum. No A. 048728 dated 22—3—1965 The administration of the fund shall vest in us and our successors in interest.

3. The interest accrued from the endowed capital shall be utilised to pay remuneration to a Sanskrit Pandit appointed in the Parvatha Vardhani Girls' High School, Rameswaram under the following conditions:-

a. The Sanskrit Pandit shall possess the required general and professional qualifications prescribed for the post.

b. The Pandit shall teach Sanskrit to pupils studying in the Standards 8 to 11 or 6 to 11 according to the syllabus prescribed by Educational Department either outside the school hours or during the school hours, as permitted by the Educational department.

c. The Pandit shall be paid a salary of Rs. 90/- (Rs Ninety) per month from the income from endowment and the D. A. if any, shall be met by the management of the High School from its funds.

d. The increments to be given to the Sanskrit Pandit shall also be borne by the Management of the Girls' High School.

e. The Sanskrit Pandit shall every month send a report to us of having satisfactorily done his duties of teaching Sanskrit assigned to him in the school through the Headmaster or Correspondent of the said Girls' High School at Rameswaram. On receipt of the report, the pay of the Pandit will be sent by M O to the Headmaster or the Correspondent of the School every month who shall disburse the amount to the Sanskrit Pandit and send the stamped receipt to us.

f. The Sanskrit Pandit shall be eligible for salary during all the vacations in the school and also eligible for leave as per M. E. R. or the leave rules framed by the management which is applicable to the other teachers in the school if he had continuously worked for 8 months in the year.

4. If at any time the teacher does not work or takes a long leave without pay, a qualified substitute may be appointed and he shall be paid salary as the permanent incumbent. If a qualified substitute is not available, the unspent amount shall be utilised by us for any other High school imparting education in sanskrit at our discretion.

5. If the teaching of sanskrit to pupils in the school is approved and allowed by the Educational Department and if the pay of the Sanskrit Pandit is met by the Educational Department, the amount set apart for this purpose under this endowment may be utilised to award scholarship to deserving girl pupils studying sanskrit under the terms of this Endowment.

6. The endowment shall not be diverted to any purpose other than those mentioned above.

7. The endowment capital shall always stand in in our name and our successors-in-interest. It may be re-invested in highest interst yielding securities as and when necessary.

Note: This endowment has been accepted by the Trust Board. Sri Ramanathaswami Devasthanam, Rameswaram in subject No. 14 dated 15-7-65 communicated in Roc. 1925/65 A. 3 dated 21—7—65 of the Deputy Collector-Executive Officer, Rameswaram Devasthanam.

Tirupanandal
Dated 23-7-1965 } (Sd) *Kasivasi Arulnandi Tambiran.*

Registered at Tiruvidaimarudur Sub Registrar's Office on 24-7-65 as No. 36 of 1965 in Book No 4. Volume No. 53 pages 21 to 24.

★ திருவிசைப்பா ★

திருப்பல்லாண்டு

[ஒன்பதாம் திருமுறை]

★ தெளிவுரை ★

புதிய பதிப்பு

(குரோதி ஆண்டு மார்கழித் திருவாதிரை வெளியீடு)

376 பக்கம் வெள்ளைத் தாள். தனிப் பிரதி அடக்க விலை ரூ 1-50

ஒரேசமயத்தில் 20 பிரதிகளுக்கு மேல் வாங்குவோருக்கு 20% கழிவு.

(தபால் செலவு வேறு)

கிடைக்குமிடங்கள் :-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில்,
ஸ்ரீவைகுண்டம். (திருநெல்வேலி ஜில்லா)

2. "தியாகராச விலாசம்"
53, பிள்ளையார் கோயில் தெரு, திருவேட்டீசுவரன்பேட்டை,
திருவல்லிக்கேணி, சென்னை-5